

271. இழந்த மணியின் அருமை

'மூன்று உலகுடையவன் தங்கை மூக்கிலள்' என்பதைச் சக்கரவர்த்தி கண்டு கொள்வதற்கு முன்பே இலங்கைப் பிரஜைகள் கண்டு பிடித்து விட்டார்கள். செய்தி வெகு விரைவில் ராஜதானி எங்கும் பரவி விடுகிறது. துயரப் படுகிறார்கள், கோபப்படுகிறார்கள், கூடிக் கூடிப் பேசுகிறார்கள். திறுதிறு வென்று விழிக்கிறார்கள்; திடு திடுவென்று ஓடுகிறார்கள், ஒருவர் முன் ஒருவராக. எனினும், யாராவது போய்ச் சக்கரவர்த்திக்குச் செய்தி தெரிவிக்கிறாரா? ஏன் இல்லை? அருமந்த தங்கை தர்பாரில் வந்து முகங் காட்டிய பின்பு தானே அந்த மூக்கறுப்பு வெளிப்படுகிறது ராவணனுக்கு? காரணம் என்ன? சற்று ஆலோசித்துப் பாருங்கள்.

இழந்த மூக்கைக் குறித்து எவ்வளவோ அனுதாபம் காட்டித் துக்கம் கொண்டாடிய போதிலும், அந்த ராஜ பக்தர்கள் தங்கள் அருமந்த நாக்கை இழந்து விட விரும்ப வில்லை! 'மூக்கறுபட்ட செய்தி சொன்ன நாக்கையும் அறுத்து விடுவார் ராவணனார்!' என்று சூர்ப்பணகை ராமனைப் பயமுறுத்தியது ஞாபகத்திற்கு வருகிறதல்லவா? இந்தப் பொய் மகளின் அந்த வார்த்தை பொய்யல்ல என்பதை இப்பொழுது நாம் அறிந்து கொள்கிறோம்.

'கவி பாடாதே!'

தன் இளைய செல்வி பொய் சொல்லக் கூடியவள் தான் என்பது ராவணனுக்கும் தெரிந்தது தான். மானிடர் மூக்கரிந்ததாக இவள் சொன்னதும், 'நம்மிடம் இவள் வேணுமென்று பொய் சொல்லாவிட்டாலும், பயத்தால் வாய் குழறி ஒன்றுக்கு ஒன்றாய்ப் பேசக் கூடுமல்லவா? அதுவும் பொய்தானே' என்று நினைக்கிறான்:

செய்தனர்கள் மானிடர்
எனத்,திசை அனைத்தும்
எய்தநகை வந்த(து),எரி
சிந்தினகண் எல்லாம் ;
'நொய்(து)அவர் வலித்தொழில் !
நுவன்றமொழி ஒன்றோ ?
பொய்தவிர், பயத்தைஒழி,
புக்கபுக்கல்' என்றான்.

[என — என்று சொல்லி. திசை அனைத்தும் எய்த — திக்கெல்லாம் முட்டிப் பரவியதென்று பிரமிக்கும்படி. எரி — நெருப்பு. நொய்து — அற்பமானது. வலித் தொழில் — வல்லமைச் செயல். நுவன்ற — சொன்ன. ஒன்றோ — ஒரு வார்த்தையா. புக்க புகல் — நடந்ததை நடந்தபடியே சொல்லு.]

சர்வாதிகாரத் தோரணை என்றால் இதுதானே ? 'ஓஹோ, மனிதர்களா அப்படிச் செய்தது ?' என்று ஒரே எரிச்சலோடு, ஒரே ஆங்காரத்தோடு கடகட வென்று திக்கெல்லாம் வெடிபடச் சிரிக்கிறான். 'அவுட்டுச் சிரிப்பு' என்கிறார்களே அந்த மாதிரி ஒரு சிரிப்பு. அந்தச் சிரிப்பிலிருந்தும் அந்தப் பேய்விழிப்பிலிருந்தும் சிந்துகின்றனவாம் நெருப்புப் பொறிகள், கொடிய கோபக் கங்குகள்.

இந்த நிலையில் 'மனித பலமாவது மண்ணாங் கட்டியாவது' என்று கர்ஜித்த வண்ணம், 'சூர்ப்பணகாய் ! அப்படிச் சொல்லாதே ! கற்பனை செய்யாதே, கவி பாடாதே ! உள்ளது உள்ளபடியே பேசு' என்று அதட்டினான் ராவணன்.

சூர்ப்பணகை விவரமாகப் பதில் சொல்லத் தொடங்கினாள். ராம லட்சுமணாது மேனியழகு குறித்து மறுபடியும் வாய்குளிரப் பேசி, அந்த அழகிய தோளின் வலிமையையும் வற்புறுத்தினாள்.

இரண்டு மன்மதர்கள் ?

முனிவர்களிடம் ராமலட்சுமணருக்கு உள்ள பக்தியைப் பிரஸ்தாபித்துவிட்டு மறுபடியும் அந்த முக அழகிலும் கண்ணழகிலும் ஈடுபடுகிறாள். அந்தத் தவக் கோலமும் அவர்களுக்கு எவ்வளவு அழகாய்ப் பொருத்தமாய் இருக்கிறது ! தவத்திற்குப் பொருத்தமில்லாத வில்லும் அம்பறாத் தூணியும் போட்டி போட்டு அந்த அழகை எவ்வளவு பிரமாதமாய், எவ்வளவு கம்பீரமாய்த் தூக்கிக் காட்டுகிறது !

வற்கலையர், வார்கழலர் ;
மார்பின்அணி நூலர் ;
விற்கலையர் ; வேதம்உறை
நாவர் ;தளிர் மெய்யர்;
உற்கலையர், உன்னைஓர்
துகள்துணையும் உன்னார் ;
சொற்கலை எனத்தொலைவில்
தூணிகள் சுமந்தார்.

[வற்கலையர் — மரவுரி உடுத்தவர்கள். வார் கழலர் — நீண்ட வீரக் கழலை உடையவர்கள். நூல் — பூணூல். வில் கலையர் — வில்லின் கலையில் வல்லவர். வேதம் உறை நாவர் — வேதம் வசிக்கின்ற நாவினர். தளிர் மெய்யர் — தளிர் போன்ற மேனியர். உற்கு — உனக்கு. அலையர் — அஞ்

சாதவர்கள். தகள் துணையும் — தூள் அளவாகவும். உன்னூர் — மதியாத வர்கள். சொற்கலை — ('தெய்வப் பாடல்' என்று சொல்லத்தக்க) கவிதையிலே மந்திர வித்தையால் வந்து விழுவது போல் அமைந்து விடும் சொற்களின் கலைவடிவம். தொலைவில்-அழிவில்லாத. தூணி-அம்பறாத் தூணி.]

பிறகு சூர்ப்பணகை, முனிவர்களுக்கு ராமன் ராட்சஸ வதம் செய்வதாகச் சபதம் செய்து கொடுத்திருப்பதையும் ராவணனிடம் தெரிவிக்கிறாள். அப்பால் மீண்டும் அந்த மன்மத மேனியைச் சுற்றிச் சுழல்கிறது அரக்கியின் மனம். அவர்களுடைய வீர சௌந்தரியத்திலும் மோகித்துப் போகிறது :

மாரர்உள ரேஇருவர்,
ஓர்உலகின் வாழ்வார்?
வீரர்உள ரேஅவரின்
வில்லதனின் வல்லார்?
ஆர்ஒருவர் அன்னவரை
ஒப்பவர்கள் ஐயா?
ஓர்ஒருவ ரேஇறைவர்
மூவரையும் ஒப்பார்!



[மாரர் - மன்மதர்கள். உளரே - இருக்கிறார்களோ. அவரின் - அவர்களைக் காட்டிலும். அன்னவரை - அவர்களை. ஓர் ஒருவரே - அவர்களில் ஒவ்வொருவருமே. இறைவர் மூவர் - மும்மூர்த்திகள்.]

கடைசியாக, அந்த மனிதர்கள் இன்னாரென்பதையும் தெளிவாகச் சொல்லிவிடுகிறாள் சூர்ப்பணகை. 'தசரத ராஜகுமாரர்கள்' என்று சொல்லிவிட்டு,

'விரா(வ)ரு வனத்(து),அவன்
விளம்ப, உறைகின்றார் ;
இராமனும் இலக்குவனும்
என்பர்பெயர்' என்றாள்.

[விராவரு - (காட்டு மனிதர்) வந்து சேர்வதற்கு அரிய காட்டிலே. விளம்ப - சொல்ல ; சட்டளையிட. உறைகின்றார் - வசிக்கிறார்கள். இலக்குவன் - லட்சுமணன். என்பர் — என்று சொல்லப்படுவார்கள்.]

இழந்த மணி

சூர்ப்பணகை சொன்னதை யெல்லாம் எப்படியோ பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான் ராவணன். அவர்களுடைய ரூப சௌந்தரியம் குறித்து அவள் சொன்னதெல்லாம் 'அடையாள வார்த்தை தான், அவர்களை அடையாளம் காட்டத்தான்' — என்று எண்ணி யிருக்க வேண்டும். சரி ; அவள் பொய் சொல்லவில்லை ; மனிதர்கள் இப்படித் தகாத காரியம் செய்து விட்டார்கள். ஆனால்,

மருந்தனைய தங்கைமணி
நாசி,வடி வாளால்
அரிந்தவரும் மானிடர் ;
அரிந்தும்உயிர் வாழ்வார் !

[மருந்து அனைய — அமிர்தம் போன்ற. மணி நாசி - அழகிய மூக்கு. வடிவாள் — கூர்மையான வாள்.]

என்ற இந்த நினைப்பு ராவணனை என்ன பாடு படுத்தி யிருக்க வேண்டும் !

ராவணனுக்குத் தன்மேல் எவ்வளவு வெறுப்பை, தங்கை மேல் எவ்வளவு அபிமானத்தை, மனிதர் மேல் எவ்வளவு கோபத்தைத் தூண்டி விடுகிறது இந்த நினைப்பு !

சூர்ப்பணகையே தான் இழந்த மூக்கின் அருமை பெருமைகளில் ஈடுபட்டு ராமனிடம் 'அது செயற்கையாகச் செய்து கொள்ள முடியாத மூக்கு (ஆக்கரிய மூக்கு)' என்று சொன்னாளல்லவா? அண்ணனும் தன் அருமந்த தங்கையின் அருமந்த மூக்கை 'மணி நாசி' (இரத்தினம் போன்ற மூக்கு) என்று பாராட்டுகிறான். அதாவது, இழந்த இரத்தினமாகவே மதிக்கிறான்.

அவனுக்கோ வேறு தங்கை இல்லை. அவளுக்கோ வேறு அழகும் இல்லை. இந்த நஷ்டத்திற்குக் காரணமானவரும் அற்ப மனிதர்கள். அவர்கள் இன்னும் கொல்லப்பட வில்லை, தற்கொலை செய்து கொள்ளவும் இல்லையே ! என்ன மானக் கேடு ! இது ராவணனைக் கொல்லாமல் கொல்லுகிறது.

ஆனால் அந்தக் காட்டிலே கரன் ஏன் சும்மா இருக்க வேண்டும் ? குன்று போல, நெடு மரம் போல நின்று கொண்டிருப்பதற்கா அவனை அங்கே படைத் தலைவனாக நியமித்திருக்கிறான் ராவணேச்வரன் ?



272. கரன் பட்ட செய்தி

‘விருந்தாளி போல வந்து வீற்றிருக்கிறது வாள் கையிலே. கண்கள் திகைத்து விழிக்கின்றன. வெட்கம் என்பது கொஞ்சமாவது காணப்படுகிறதா? அருமந்த தங்கையை அங்க பங்கஞ் செய்தவர்களும் உயிர் வாழ்கின்றனர்; ராவணனும் உயிர் வாழ்கின்றான். உயிரின் இனிமைதான் என்ன இந்த ராவணனுக்கு!’—இப்படி ராவணனை வெறுத்து யார் எண்ணுகிறார் அல்லது பேசுகிறார்?

சோகமும் மானமும் வீரமும்

ராவணனேதான் இப்படிப் பேசுகிறான், தன்னைப் பிறன்போல, வடுப்பட்ட பெருமிதத்துடன். மேலும் சொல்லுகிறான் தனக்குத் தானே: ‘என் வலிமையால் எங்கும் வெற்றியே நிறைத்து அரசு கொண்டேன். அந்த வெற்றிப் பயன் இதுவோ? உலக வீரர்களின் தலைகளை யெல்லாம் நான் ஒருங்கே அறுத்துத் தள்ளினாலும் இந்த மூக்கறுப்பு என்ற ஒரு பழிக்குப் பரிகாரமாகுமோ?

கொஞ்சம் மௌனம். மறுபடி மூளுகிறது மானக் கனல்: ‘அந்த ஆசாமிகள் இன்னும் இருக்கிறார்களாம்; அந்த உடம்புகளில் உயிரும் இருக்கிறதாம். என்னிடம் வாளும் இருக்கிறது. வாள் மட்டுமா?

நாளும்உள, தோளும்உள,
நானும்உளன் அன்றோ?’

[நாள் — (நீண்ட) ஆயுள் நாள்.]

என்கிறான்.

மேலும் புகைந்து கனன்று பொங்குகிறது ஆறாத மானம். நெஞ்சோடு பேசுகிற பேச்சு இது:

தத்துறுவ(து) என்னை ? மன —
வே, தளரல் அம்மா !
எத்துயர் உனக்குள(து) ?
இனிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி,
தோள்கள்பல அன்றே !

[தத்துறுவது — அலைந்து தவித்துத் தடுமாறுவது. என்னை — என். தளரல் — நீ தளராதே. தலைப் பகுதி — தலைவர்க்கம்.]

இந்தப் பாடல்களைப் பாடப் பாட, மானத்தால் புழுங்கும் வீர நெஞ்சு அப்படியே நம் மனக் கண்ணுக்கு இலக்காகிறது. அந்த அகத்தோடு இப்படியெல்லாம் தனக்குத் தானே உரை செய்து நகை செய்து நெருப்பெழ விழிக்கும் முகத்தையும் பார்க்கிறோம்.

'அந்தச் சின்ன மனிசர் இருவரையும் வெட்டி வீசி விடாமல், நெடு மரம்போல நின்று, விழுதுகள் போலக் கைகளைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிறார்களா, கரன் முதலிய ராட்சஸ வீரர்கள் ?' என்று கர்ஜிக்கிறான் ராவணன். தங்கைக்குப் பாதுகாவலாகத் தான் நிறுத்தி வைத்திருந்த கரன் முதலான அரக்கர்கள் தண்டகாரண்யத்திலுள்ள காடும் குன்றும் போல் நிலைபெற்றிருப்பதாகவே ராவணன் எண்ணம். 'அவர்கள் அந்த இரண்டு அற்ப மனிதர்களையும் வாளால் வீசி விடவில்லையா ?' என்ற கேள்விதான், கரனை மறந்திருந்த சூர்ப்பணகைக்கு அந்தப் பழைய நினைவை மூட்டி விடுகிறது.

சோகம், தாபம், மோகம்

கண்ணீர் அருவியாகக் கொட்டுகிறது. காமாந்தகாரத்தைப் பீறிக் கொண்டு புறப்படுகிறது பழைய ஞாபகம். வயிற்றில் அறைந்துகொண்டு தரையிலே விழுந்து ஏங்குகிற அரக்கியை இதோ பாருங்கள் :

அற்றவன் உரைத்த லோடும்,
அழுதிழி அருவிக் கண்ணள்,
எற்றிய வயிற்றள், பாரின்
இடைவிழுந்(து) ஏங்கு கின்றாள்,
'சுற்றமும் தொலைந்த(து) ஐய !
நொய்தெ'னச் சுமந்த் கையள்,
உற்றது தெரியும் வண்ணம்
ஒருவகை உரைக்க லுற்றாள்.

[அற்று — அவ்வாறு. இழி — இறங்குகின்ற. எற்றிய — (கைகளால்) மோதப்பட்ட. பாரின் இடை — தரையிலே. நொய்து — விரைவிலே. என் — என்று. சுமந்த—தலைமேல் கொண்ட. உற்றது—நேர்ந்த நாசம். உரைக்கலுற்றாள் — சொல்லத் தொடங்கினாள்.]

கரன் வதையே இப்பொழுது நடக்கப் போகிறது, ஒரு நாடகம் போலே. முதல் முதல் சூர்ப்பணகையின் மனக்கண் முன்பு நடக்கிறது. தங்கை பேசப் பேச ராவணன் கண் முன்பும் நடக்கிறது. எல்லாம் கவிஞனுடைய மனோலோகத்தில் நடக்கும் நாடகம்தான். இது கவிதையில் நடந்து நம் கண் முன்பும் நடக்கிறது. ஆஹா, என்ன கொடிய ஞாபகம் இந்தச் சூர்ப்பணகைக்கு !

'சொல்'என்(று)என் வாயில் கேட்டார்

என்று தொடங்குகிருள் சூர்ப்பணகை. இவள் வாயைத் திறப்பதற்கு முன்னமே அவர்கள் கேட்டார்களாம் ஆத்திரமாக, 'என்ன சமாசாரம்?' என்று. இவளுடைய வாயால் 'சொல்' என்ற ஒன்றைக் கேட்டதும் புறப்பட்டார்களாம் போருக்கு :

'சொல்'என்(று)என் வாயில் கேட்டார்,
தொடர்ந்தெழு சேனை யோடும்
'கல்'என்ற ஒலியில் சென்ருர்
கரன்முதல் காளை விரர்.

எப்படியோ ஒருவாறு விஷயத்தைச் சொன்னதுதான் தாமசம்; சேனைகள் ஒன்றன் பின் ஒன்ருக நெடுந்தூரம் தொடர்ச்சியாகப் போய்க் கொண்டிருந்தன. அந்தச் சேனைகள் தங்களைப் பின் தொடர்ந்து ஓடி வரும்படி மிடுக்காக முன்னணியில் முடுக்குகிருர்களாம் கரன் முதலிய வீரர்கள். சேனைகளை நோக்கிப் 'போங்கள்' என்று கட்டளையிட்டுப் பின்னே ஜாக்கிரதையாகச் செல்லும் படைத் தலைவர்கள் அல்லர் இந்தக் காளை வீரர்கள். 'வாருங்கள்' என்று உத்தரவிட்ட வண்ணம், அபாயத்தைக் காதலித்து அலட்சியமாக முன்னே போகும் இந்த வீரர்களின் கால்களில் வீரக்கழல் 'கலீர், கலீர்' என்று சப்திப்பதுகூட, ரணபேரிகைகளின் முழக்கங்களுக்கிடையே, நமது காதில் விழுகிறது,

'கல்'என்ற ஒலியில் சென்ருர்
கரன்முதல் காளை விரர்

என்று பெருமை யடித்துப் பேசும்போது.



இனி, இந்தச் சூர்ப்பணகா தேவிக்கு அந்தக் கரன் முதல் காளை வீரர்களுக்கு எதிரே நின்ற அந்தக் காளைவீரனின் ஞாபகமும் வந்து விடுகிறது. அவ்வளவுதான், எடுத்துக் கொண்ட விஷயமே போய்விடுகிறது! போர்க்கோலம் பூண்டிருந்த கோதண்டபாணியின் ரூப சித்திரத்திலே சொக்கிப் போகிறது மனம். அவர்களைக் கண்டதும் அவன் கண்களிலே வீர ஒளி வீசியதாம். அந்தக் கண்ணழகு இவளை இப்பொழுது என்ன பாடு படுத்துகிறது! ரூப சௌந்தரியத்திலே வீர சௌந்தரியத்தையும் கண்ட அந்த ஞாபகம், இவளை வெறி கொள்ளச் செய்து ராவணன் முன்,

எல்ஒன்று கமலச் செங்கண்
இராமன்என்(று) இசைத்த ஏந்தல்

[எல் – ஒளி; இங்கே வீர ஒளி. ஒன்று – பொருந்திய. கமலச் செங்கண் – செந்தாமரை மலர்போல் மலர்ந்த செம்மையான கண்கள். இசைத்த – புகழ்பெற்ற. ஏந்தல் – உயர்ந்தவன்.]

என்று வாய் குளிர மனம் குளிர வருணிக்கச் செய்து விடுகிறது. ஒரு வாக்கியம் முழுதும் இசைப்பது இந்த ராமனே தான்! இப்படியே இந்த ராமனை இசைத்துக் கொண்டிருக்கவே இசைகிறது உள்ளம்.

இந்த நினைப்பிலே உள்ளம் குழைகிறது; உணர்வு கொஞ்சுகிறது. ஆனால் இந்தச் செல்லப் பேச்சை இப்படியே சரசமாக நீண்ட நேரம் வளர்த்துக் கொண்டிருக்கவும் முடிய வில்லை.

வீர ராமனுடைய விஜயத்தைச் சொல்லி அவனுடைய உயர்வை ஒரே அடியாக ஸ்தாபித்துவிட வேண்டுமல்லவா? எனவே,

'வில்ஒன்றில் கடிகை மூன்றில்
ஏறினர் விண்ணில்!' என்றாள்.

[கடிகை – நாழிகை.]

வில் ஒன்று தான்; நாழிகை மூன்று. வில்லின் குற்றமா? அவ்வளவு பெருங் கூட்டம். வில்லால் ராமன் அவர்களை விண்ணேற்றினான் என்று சொல்ல வில்லை. அவ்வளவு சிரமம் கூட அவர்கள் இவனுக்குக் கொடுக்க வில்லையாம். அவர்களே விண்ணில் ஏறிப் போய் விட்டார்களாம், அந்த ஒரு வில்லை ஏணியாகக் கொண்டு.

இந்தப் பாட்டைப் பாடிப் பாருங்கள், இப் பாட்டு முழுமையும்:

'கேட்டார், சென்றார், விண்ணில் ஏறினர்' — இம்மூன்று வார்த்தைகளில் பேசித் தீர்த்து விடுகிறாள் சூர்ப்பணகை, கரன் முதலிய காளை வீரர்கள் வதமான பெருஞ் செய்தியை. அவர்கள் போர் செய்த பேச்சே இல்லை. அவ்வளவு அநாயாசமாக ராமன் வெற்றி அடைந்தான் என்பது குறிப்பு. அந்த வெற்றியில் இந்தக் 'காதலி' உள்ளம் 'கள்வெறி' கொள்வது போலத் தோன்றுகிறது.

பாட்டு முழுதும் பாடிப் பாருங்கள். கரன் முதலிய காளை வீரர்களின் பிரதாப வருணனையாகத் தொடங்குவது ராமவீரனின் வெற்றிப் பிரதாபமாக முடிகின்றது. சூர்ப்பணகை சொல்லும் கரன்பட்ட செய்தி, உணர்ச்சிகளின் ஒரே கொந்தளிப்பு. இங்கே கவியுள்ளம் சூர்ப்பணகையாகப் பிறவி எடுத்து நம் கண்முன் நடிக்கிறது! இது மகா கவியின் வெற்றி — ராமனுடைய வெற்றிக்குக் குறைந்ததா?



273. ‘என் குற்றம் உன் பாக்கியம்!’

கரன் பட்ட செய்தி கேட்டதும் கோபமும் தாபமும் சோகமும் மானக் கொதிப்பும் ஒருங்கே படையெடுக்கின்றன ராவணன் மீது. செய்தியா சொன்னாள்? நாலு காட்சிகளில் நடத்தி முடித்து விட்டாள் ஒரு துரித நாடகம், சப்த சித்திரங்களின் மூலமாக!

‘தொடர்ந்தெழு சேனை’ என்று சூர்ப்பணகை சொன்னதும் அந்தச் சேனைவீரர்கள் போருக்கு உரிய அடையாளப் பூமாலைகள் அணிந்து அணி வகுத்த நிலையில் கம்பீரமாய்ச் செல்வதும், தனக்குத் தம்பி முறையில் உள்ள கரனும் தூஷணனும் திரிசிரனும் அந்த வீரர்களை நடத்திய வண்ணம் இறுமாப்புடன் முன்னேறுவதும், ராவணன் கண்முன் நிகழ்ந்தன. ‘கல்’லென்ற அந்த ஒலி கூடக் காதில் விழுவதுபோல் ஒரு பிரமை. இத்தகைய ராட்சஸப் பெரும்படை கண்டதும் ஓடிப்போய் விடாமல் நின்று தன்னந் தனியனாகவே சூர்ப்பணகைப் பிராட்டியின் திவ்ய சௌந்தரிய மூர்த்தி போரிடத் துணிந்ததும் ராவணனைப் பிரமிக்கச் செய்திருக்கவேண்டும். அவ்வளவு ‘அசட்டுத் துணிவு’ கொண்டவன் அந்தப் போரில் மடியவில்லை, தன் தம்பிமார்களே மடிந்துபோயினர் என்று நாடகம் முடிந்ததும் ராவணனுக்கு எப்படித்தான் இருந்திருக்குமோ?

நாம் என்ன கண்டோம்? கவிஞன் கண்டு காட்டுவதைக் காண்கிறோம்:

தாருடைத் தானை யோடும்
    தம்பியர், தமியன் செய்த
போரிடை மடிந்தார் என்ற
    உரைசெவி புகாத முன்னம்,
காரிடை உருமின் மாரி
    கனலொடு பிறக்கு மாபோல்,
நீரொடு நெருப்புக் கான்ற,
    நிறைநெடுங் கண்கள் எல்லாம்.

[தார் - மாலை, (இங்கே) போர்மாலை. தானை - சேனை. தமியன் - தன்னந் தனியாக நின்ற ராமன். செவிபுகாத முன்னம் - செவியில் விழுந்ததோ, இல்லையோ என்று சொல்லக் கூடிய அவ்வளவு அவசர காலத்தில். காரிடை - மேகத்தினிடையே. உருமின் மாரி - இடியோடு கூடிய மழை. கனலொடு - அந்த இடிக்கனலோடு. பிறக்குமா போல் - தோன்றும் விதம் போல. கான்ற - கக்கி விட்டன. நிறை நெடுங்கண்கள் - கண்ணீர் நிறைந்த பெரிய கண்களெல்லாம்.]

இருபது கண்களும் நீரையும் நெருப்பையும் ஒருங்கே சொரிகின்றனவாம், மேக ஜாலங்களிலிருந்து ஏக காலத்தில் மழையும் இடி - நெருப்பும் பொழிவது போல. எனினும் விரைவில் கோபத்திலே உள்ளடங்கிப் போகிறது சோகம்; இது நெருப்பை வளர்க்கும் நெய்போலக் கோபத்தை உள்ளிருந்தபடியே போஷித்து ஜொலிக்கச் செய்கிறது.



இந்த நிலையில் எதிரி சாமானியனில்லை என்பதும் தெரிகிறது. ராவணன் தங்கையை நோக்கி, 'நீ அவர்களுக்குச் செய்த குற்றம் தான் என்ன?' என்று கேட்கிறான். இதற்கு முன், அதிகார வெறியில் மயங்கிக் கிடந்த உள்ளத்தில் இப்படி ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்றே தோன்ற வில்லை.

இக்கேள்விக்கு விடை கூறுவதை வியாஜமாகக் கொண்டு ராவணன் உள்ளத்தில் மோகத்தை மூட்டப் பார்க்கிறாள் சூர்ப்பணகை :

'என்வயின் உற்ற குற்றம்
யாவர்க்கும் எழுதொ ணாத
தன்மையன் இராம னோடும்
தாமரை தவிரப் போந்தாள்,
மின்வயின் மருங்குல்
கொண்டாள்,
வேய்வயின் மென்றோள்
கொண்டாள்,
பொன்வயின் மேனி
கொண்டாள்
பொருட்டினால் புகுந்த'
தென்றாள்,

[என்வயின் - என்னிடத்தில். யாவர்க்கும் எழுதொணாத - எத்தகைய சித்திர நிபுணராலும் எழுத முடியாத. தாமரை தவிரப் போந்தாள் - தனக்கு உரிய செந்தாமரைக் கோயில் துறந்து வந்துவிட்ட அழகுத் தெய்வமாகிய சீதாலட்சுமி. மின் வயின் - மின்னலிடத்தில். மருங்குல் - இடை. வேய் - மூங்கில்;

(இங்கே) இளமூங்கில். மென்றோள் — மெல்லிய தோள். பொன்வயின் - பொன்னிடத்தில். புகுந்தது — சம்பவித்தது.]



ராவணன் கேட்ட கேள்விக்குச் சூர்ப்பணகை, தான் ஒரு குற்றமும் அறியாதவள் என்று பதில் சொல்லப் போவதாக நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அண்ணனுடைய குறைகளை நன்றாக அறிந்திருந்த அவள் 'நான் ஒரு குற்றம் செய்தேன்' என்று தைரியமாக ஒப்புக்கொள்கிறாள். உடனே ஆச்சரியத்தோடு இருபது செவிகளும் அவள் சொல்வதைக் கேட்கத் தயாராகின்றன.

அவள் உள்ளம் யாவர்க்கும் சித்திரிக்க முடியாத வடிவழகனாகிய ராமனோடு மறுபடியும் ஓடப் பார்க்கிறது. பழையபடியே கட்டவிழ்த்துக்கொண்டு வேதாளம் முருக்க மரம் ஏறிக்கொண்ட கதைதான்! ஆனால், தன் விருப்பத்திற்கு இடையூறாக இருப்பவளை ராமனிடமிருந்து விரைவில் பிரித்துவிடவேண்டும் என்ற மன உறுதியோடு இப்பொழுது ராவணன் முன் சீதையழகை வருணிக்கத் தொடங்குகிறாள்.

'அழகனாகிய ராமனுடன் ஒரு கட்டழகி வந்திருக்கிறாள். அவள் அப்படி இப்படி நடக்கும்போதும் திரும்பும்போதும் பளிச்சுப் பளிச்சென்று மின்வெட்டுவது போலத் தோன்றுகிறது. அப்படி மின்னும் இடையை மின்னலிடம்தான் அவள் பெற்றிருக்க வேண்டும்! மூங்கிலிடம் தன் மெல்லிய தோளை வாங்கிக் கொண்டாள்; பொன்னிடம் பெற்றுக் கொண்டாள் மேனியை! இப்படிப் பட்ட ஒரு ஸ்திரீ ரத்தினத்தின் காரணமாகத்தான் நான் குற்றம் செய்ய நேர்ந்தது!' என்று பூர்வ பீடிகையாகப் பேசுகிறாள். 'எல்லாம் உன் நன்மைக்காகத்தான், அண்ணா! — உன் மேன்மைக்காகத்தான்!' என்பது குறிப்பு.

இது கேட்ட ராவணன், 'ஆர் அவள்?' என்று கேட்கிறான். உடனே சூர்ப்பணகை அதுதான் தருணமென்று மேலும் அவளுடைய அங்க சௌந்தரியத்தைச் சிறிது வியந்துரைத்து, ராவணனுடைய முழுக் கவனத்தையும் அப்படியே ஆகர்ஷித்துக் கொள்ள விரும்புகிறாள்:

'பார்அவள் பாதம் தீண்டப்
பாக்கியம் படைத்த தம்மா!
பேர்அவள் சீதை' என்று
வடிவெலாம் பேச லுற்றாள்.

ராவணன் தன் வசமிழந்து கவனிப்பது கண்டு, தன் நோக்கம் கூடிய சீக்கிரத்தில் சித்தியாகும் என்ற உள்ளக் கிளர்ச்சியுடன், மேலும் பேசுகிறாள்.

அழகுத் தெய்வமாகிய மகாலட்சுமி போல் இருக்கிறாள் சீதை என்று ஏற்கெனவே வருணித்தவள், அந்த அபிப்பிராயத்திற்கே இப்பொழுது ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வருவதுபோல், அந்த மகாலட்சுமி தோலட்

சுமிக்கு] வேலைக்காரியாக இருக்கவும் தகுதியில்லாதவள் என்று கண்டு பிடித்து விடுகிறான். இந்த 'ஞானோதயம்' மலர்களில் வண்டுகள் உண்ணும் தேன்போல், அந்தத் தேனுண்ண மலர்களைச் சுற்றி வரும் வண்டுகளின் ரீங்கார கீதம்போல்,' எவ்வளவு மதுரமாக, எத்தகைய மது வெறியுடன் வெளிப்படுகிறது !

காமரம் முரலும் பாடல்,
  கள்ளெனக் கனிந்த இன்சொல்,
தேமலர் நிரந்த கூந்தல்,
  தேவர்க்கும் அணங்காம் என்னத்,
தாமரை இருந்த தையல்
  சேடியாம் தரமும் அல்லள் !
யாம்உரை வழங்கும் என்ப(து)
  ஏழைமைப் பால தன்றோ ?

[காமரம்—வண்டு. முரலும்—ரீங்காரம் செய்யும். கள்-மது. தேமலர்—தேனுள்ள மலர்கள். நிரந்த—நிறைந்த. தேவர்க்கும் அணங்கு-மனிதரை மட்டுமின்றித் தேவர்களையும் காமவெறியால் ஹிம்ஸிக்கும் தெய்வப் பெண். தாமரை இருந்த தையல்—தாமரை மலரில் வாழும் லட்சுமி. சேடி—(இங்கே) பணிப்பெண். வழங்கும்—வழங்குதும்; வழங்குவோம். ஏழைமைப் பால தன்றோ—அறிவின்மையின்பால் படுவதன்றோ.]

இந்தப் பாட்டின் கடைசி வாக்கியத்திலே சூர்ப்பணகை, 'ஸாக்ஷாத் மகாலட்சுமியும் எந்தப் பெண்ணுக்கு வேலைக்காரியாக இருக்கத் தகுதிபெற வில்லையோ, அந்தப் பெண்ணின் அழகை நாம் எப்படிச் சொல்லி முடிப் போம்? 'யாம் உரை வழங்குவோம் என்பது அறியாமையின்பால் படுவ தன்றோ? ஆயினும் இயன்ற அளவு உரை வழங்குவோம்' என்று ஏதோ ஒரு பிரபந்தம் பாடப்போகும் கவிராஜர் பண்டிதர் ஒருவரைப் போல் அவையடக்கம் சொல்லுகிறானல்லவா? சபைக்கு அடங்குவது போல் அடக்கம் பேசிச் சபையை அடக்குவதுதானே படாடோப பண்டித கவிரா யரின் நோக்கமும்?

இங்கே சபை ராவணன் தான்—ராவணனுடைய இருபது செவிகளும் தான்! அவனோ உடம்பெல்லாம் செவியாகி உருகிப்போகுமாறு இன்னிசை யாய்ப் பெருகிவருகிறது சிங்கார பிரபந்தம்! நாமும் கேட்டு ரஸிக்கலாமே!



274. அரக்கி பாடும் பிரபந்தம்

சீதையின் தெய்விக அழகு ராவணனைக் காம பரவசனாக்க வேண்டுமென்ற கருத்தோடு சித்திரிக்கப் படுகிறது. கட்டி முடித்த கூந்தலையும் அவிழ்ந்து தொங்கும் கூந்தலையும், பஞ்சு போல் மென்மையான பாதத்தையும், பவளம் போல் அழகிய விரல்களையும் வருணிக்கிறாள் சூர்ப்பணகை.

இப்படி வருணித்ததும், திடீரென்று 'அவளுடைய பேச்சை யல்லவா கேட்க வேண்டும்? அந்த அழகிக்கும் அவ்வளவு அழகான வார்த்தைகள் எப்படிக் கிடைத்தனவோ? எங்கே யிருந்து கிடைத்தனவோ? நான் சொல்லுகிறேன் கேள், அந்த அழகிய சொற்களை அள்ளிக் கொண்டாள் அமிர்தத்திலிருந்து, ஆசை தீர!' என்று ஆசை மூட்டுகிறாள் ராவணனுக்கு.

'கடலினும் பெரிய கண்கள்'

ஆனால் அந்தக் கண்களின் பாஷைக்கு முன் வாய்ப் பேச்சும் தோற்றுப் போகுமாம் — 'அத்தகைய கண்களின் பெருமையை என்னென்பது? 'கடலைக் காட்டிலும் பெரிய கண்கள் அந்தச் சிறிய முகமலரிலே அடங்கியிருக்கும் அதிசயமே அதிசயம்!' என்கிறாள்.

இப்படி ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியமாகச் சீதையை வருணிக்கும் சப்த சித்திரம்:

மஞ்சொக்கும் அளக ஓதி;
  மழையொக்கும் வடித்த கூந்தல்;
பஞ்சொக்கும் அடிகள்; செய்ய
  பவளத்தின் விரல்கள், ஐய!
அஞ்சொற்கள் அமுதின் அள்ளிக்
  கொண்டவள் வதனம், மைதீர்
கஞ்சத்தின் அளவிற் றேனும்,
  கடலினும் பெரிய கண்கள்!

[மஞ்சு – மழை பொழியத் திரண்ட மேகம். அளக ஓதி – கட்டி முடித்த கூந்தல். மழை – (இங்கே) மழை பெய்யக் கால் இறங்கிய கரு மேகம். வடித்த – வாரித் தொங்கவிட்ட. செய்ய – சிவந்த. அஞ் சொற்கள் – அழகிய வார்த்தைகள். மை தீர் – குற்றமற்ற. கஞ்சம் – தாமரை மலர். அளவிற்று – அளவையுடையது.]

ஒரு புதுமைப் புராணம்

இந்தச் சித்திரம் ராவணனுள்ளத்திலே ஆனந்தக் கனவுகளைத் தோற்றுவிக்கச் சிறிது அவகாசம் கொடுத்துவிட்டு, ஒரு சமயம் ஈரம் புலர அவிழ்ந்து தொங்கும் கூந்தலில் சீதை வாசனைப்புகை ஊட்டிய வண்ணம் நின்று கொண்டிருந்ததாகவும், அந்த நிலையில் அவளை அழகுத் தெய்வமாகிய ஸாக்ஷாத் மன்மதனே பார்த்துப் பிரமித்துப் போனதாகவும் ஒரு கதை சொல்லத் தொடங்குகிறாள் சூர்ப்பணகை.

'மன்மதனா? ஈசனார் கண்ணில் வெந்து நீறாகிப் போனனல்லவா? இப்போது "அநங்கன்" (அங்கமில்லாதவன்) தானே அவன்?' என்று ராவணன் ஆட்சேபித்துத் தங்கையின் கதையைப் பொய்யென்று தள்ளக் கூடுமல்லவா? அதையும் எதிர்பார்த்துத்தான் சூர்ப்பணகை பேசுகிறாள். 'ஈசனார் கண்ணின் வெந்தான்' என்பதுதான் பொய்க் கதை என்கிறாள். ஆனால், மன்மதன் அநங்கனானது மெய்தானாம். இதற்கு உரிய உண்மைக் காரணத்தைத்தான் இவள் சொல்கிறாளாம்.

மன்மதன் சிவன் கண்ணெதிரே நின்று அப்படியாகவில்லை; பாவம், சீதை கண்ணெதிரே தான் போய் நின்றான். அவள் நீண்ட கூந்தலுக்கு வாசனையூட்டி ஈரம் புலர்த்திக் கொண்டிருந்த ஒரு சமயம். மேலே நடந்ததென்ன? சூர்ப்பணகையே சொல்லட்டும்:

'ஈசனார் கண்ணின் வெந்தான்'
என்னும்ஈ(து) இழுதைச் சொல்! இவ்
வாசம்நா(று) ஓதி யாளைக்
கண்டனன், வவ்வ லாற்றான்,
பேசலாம் தகைமைத் தல்லாப்
பெரும்பிணி பிணிப்ப, நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான்
அநங்கன்அவ் உருவம் அம்மா!

[ஈது – இது. இழுதை – பொய். வாசம் நாறு ஓதியாள் – (இங்கே) வாசனைப் புகை ஊட்டி மணம் வீசத் தொங்குகிற கூந்தலையுடைய சீதை. கண்டனன் – கண்டு. வவ்வல் ஆற்றான் – கவர்ந்து செல்ல முடியாதவனாய். பேசலாம் தகைமைத்து அல்லா — (வைத்தியர்களாலும்) இன்னதென்று சொல்லும் தன்மையுடையது அல்லாத. பிணிப்ப – பிடித்துப் பீடிக்க. அநங்கன் – அங்கத்தை இழந்த மன்மதன்.]

அங்கத்துடன் இருந்த மன்மதன் அநங்கனானதற்குச் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணைக் காரணமாகக் காட்டும் வியாச புராணம் சுத்தப் பொய்யென்று அரக்கி உறுதி கூறுகிறாள். 'மழையொக்கும்' கூந்தலுக்கு வாசனையூட்டி நின்ற அந்த நிலையில் அந்தக் கண்களுக்கு இலக்காகிவிட்ட மன்மதன் உடனே அவளைக் கவர்ந்து செல்ல விரும்பினானும். அது இயலாததால் அப்படியே போய்ப் பாயும் படுக்கையுமானான். அந்த நோய் எப்பேர்ப்பட்ட வைத்திய நிபுணர்களுக்கும் கட்டுப்படவில்லை. நோய் இன்ன

தென்றே அவர்களுக்குப் புரியவில்லையாம். ஏதோ ஒரு 'பெரும் பிணி' என்று தான் தெரியவந்தது. அந்த நீண்ட ஆசை - நோய்க்கு அவர்களுடைய வைத்திய சாஸ்திரத்தில் மருந்து ஏது? படுத்த படுக்கையி லிருந்து நோயாளி எழுந்தி ருக்கவே இல்லையாம். அப் படியே உருவம் தேய்ந்து தேய்ந்து அழிந்து போயி ற்று என்று ஒரு புதிய புராணம் சிருஷ்டிக்கிறாள் சூர்ப்பணகை.

இத்தகைய கட்டழகி விஷயத்தில் புருவம் வில்லை ஒத்திருக்கிற தென்றும், விழி வேலாயுதத்தை ஒக்கு மென்றும், பல் ஒக்கும் முத்து என்றும், இதழைப் பவளம் ஒத்திருக்கு மென் றும் புலவர் கூறும் வருண னைகளெல்லாம் சிறிதும் பொருந்துவன அல்ல என்று சித்தாந்தம் செய்கிறாள். அப்படிச் சொல்வதைக் காட்டிலும் நெல்லும் புல் லும் சமம் என்று சித்தாந் தம் செய்து விடுவது பொருந்தும் என்கிறாள் :

வில்ஒக்கும் நுதல்என்
றாலும்,
வேல்ஒக்கும்
விழியென் றாலும்,
பல்ஒக்கும் முத்தென்
றாலும்,
பவளத்தை
இதழென் றாலும்,
சொலஒக்கும்,
பொருள்ஒவ் வாதால்;
சொல்லலாம்
உவமை உண்டோ?
நெல்ஒக்கும் புல்லென்
றாலும்
நேர்உரைத் தாக
வற்றே!



[முதல் – (இங்கே) புருவம். நேர் உரைத்தாக – நேரே உரைத்த தாக ; உண்மையில் ஒப்புக் கூறியதாக. வற்றே – வல்லதோ.]

பிறகு சூர்ப்பணகை ராவணனை நோக்கி, 'இந்திரன் இந்திராணியைப் பெற்றான் ; சிவபெருமான் உமாதேவியைப் பெற்றார் ; மகாவிஷ்ணு மகாலட்சுமியைப் பெற்றார் : அப்படியே நீயும் சீதையைப் பெற்றாய்...' என்று பல விதமாகப் பேசி அவனுள்ளத்தைப் பகட்டி வசீகரித்து விடுகிறாள்.

அப்பால், நீருக்கும் நிலத்திற்கும் ஏதோ போட்டி ஏற்பட்டதாக ஒரு புராணம் கற்பித்து ராவணனுள்ளத்தை மேலும் வசீகரிக்கிறாள் :

தார்தந்த கமலத் தாளைத்
 தருக்கினர் கடையச் சங்க
நீர்தந்த(து); அதனை வெல்வான்
 நிலம்தந்து நிரம்பிற் றன்றே!

[தார் - (இங்கே) பூ. தார் தந்த கமலம் - பூப் பூத்த தாமரை. கமலத் தாள் - தாமரையில் கோயில் கொண்டிருக்கும் லட்சுமி தேவி. தருக்கினர் - களிப்புள்ளவர்கள்; (இங்கே) தேவாசுரர். சங்க நீர் - சங்குகளுடைய சமுத்திரம். வெல்வான் - வெல்லும்படி. நிரம்பிற்று - நிறைவு பெற்றது.]

அழகுத் தெய்வமாகிய மகாலட்சுமியைத் தந்தது நீர் என்றால், நிலம் மகாலட்சுமியைக் காட்டிலும் அழகு நிறைந்த சீதாலட்சுமியைத் தந்து சம்பூர்ண வெற்றி அடைந்திருக்கிறதாம்.

முடிவுரை

கடைசியாகச் சூர்ப்பணகை சொல்கிறாள் :

தோளையே சொல்லு கேனோ?
 சுடர்முகத்(து) உலவு கின்ற
வாளையே சொல்லு கேனோ?
 அல்லவை வழுத்து கேனோ?
மீளவும் திகைப்ப தல்லால்
 தனித்தனி விளம்பல் ஆற்றேன்!
நாளையே காண்டி அன்றே,
 நான்உனக்(கு) உரைப்ப தென்னோ?

[வாள் – வாள் போன்ற கண். அல்லவை – (இவை) அல்லாத உறுப்புக்கள். வழுத்துகேனோ? – எடுத்துச் சொல்வேனோ. விளம்பல் ஆற்றேன் – சொல்ல வல்லமை பெறாதவளாயிருக்கிறேன். காண்டி அன்றே – நேரில் பார்த்துக் கொள்வாயல்லவா. உரைப்பது என்னோ – இன்னும் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது.]

இந்த விதமாகச் சீதை வருணனைப் பிரபந்தம் அருமையினும் அருமையாய் இனிமையிலும் இனிமையாய்க் கானத்திலே மிதந்துவரும் தெய்வப் பாடல்களாய் வருகிறது. இந்தக் கவிகளின் அழகுச் சுவையைச் சொல்வோமா? மனோபாவத்தை வியப்போமா? ஓசை யின்பத்தைப் பாராட்டுவோமா?—

மீளவும் திகைப்ப தல்லால்
 தனித்தனி விளம்ப லாற்றேன்!

என்கிறது நம்முடைய உள்ளமும்.

ராவணனோ தன்னை மறந்து, பிரபந்தம் பாடும் தங்கையை மறந்து, பிரபந்த நாயகியின் தியானமாகவே இருக்கிறான்.



275. காது வழியே காதல்

சீதை வருணனைப் பிரபந்தம் கவிராஜ பண்டிதருக்கு உரிய அவை யடக்கத்துடன் ஆரம்பமாகி ராவணன் எதிர்பார்த்திருக்க முடியாத ஒரு பிரார்த்தனையுடன் முற்றுப் பெறுகின்றது. பிரபந்த நாயகியின் வடிவழகை ராவணன் மெய்ம்மறந்து கேட்கும்படி, ஆசிரியையும் தன்னை மறந்து விட்டாளோ என்று பிரமிக்கும்படி, நடந்த பிரபந்தம் திடீரென்று நின்றுவிடச் சூர்ப்பணகை, 'அண்ணா, உலகம் புகழும்படி நீ அந்தச் சீதை யென்னும் மானோடு விளையாடிக் கொண்டிருப்பாய்! அதே உலகம் உன் வாளின் வலிமையையும் காணும்படி ராமனை உயிரோடு பிடித்து நான் விளையாட என்னிடம் கொடுத்து விடு' என்று பிரார்த்திக்கிறாள்.

நாட்டிய - நாடகம்

தன்னுடைய உள்ளக் கருத்தை எவ்வளவு தந்திரமாக வெளியிடுகிறாள்! ராமன் மேல் தான் எவ்வளவு இரக்கம்! இதோ பாருங்கள், இந்தக் காதல் - நாடகத்தை :

மீன்கொண்டூ டாடும் வேலை—
　　மேகலை உலகம் ஏத்தத்,
தேன்கொண்டூ டாடும் கூந்தல்—
　　சிற்றிடைச் சீதை என்னும்
மான்கொண்டூ டாடு நீ! உன்
　　வாள்வலி உலகம் காண,
யான்கொண்டூ டாடும் வண்ணம்,
　　இராமனைத் தருதி என்பால்.

[மீன்கொண்டு — மீனைத் தன்னிடத்திலே கொண்டு. ஊடாடும்— அலைவீசும் கடல். வேலை மேகலை—கடலாகிய மேகலாபரணம். ஏத்த— புகழும்படி. தேன் கொண்டு ஊடாடும் கூந்தல் — வண்டுகள் மொய்க்கும்

பூக்களோடு கூடிய கூந்தல். கூந்தல் - சிற்றிடைச் சீதை — கூந்தலையும் சிறிய இடையையுமுள்ள சீதை. சீதை யென்னும் மான் கொண்டு ஊடாடும் நீ — சீதை யென்னும் மானைக் கொண்டு விளையாடும் நீ. யான் கொண்டு ஊடாடும் வண்ணம் — நான் கொண்டு விளையாடும் வண்ணம். தருதி — தந்திடு. என்பால் — என்னிடம்.]

மேகலை முதலான ஆபரண ஜாலங்கள் இலங்கக் குலுங்க நாட்டிய நாடகமாடும் பெண்மணி போல் சப்த ஜாலங்களைக் கொண்டு கூத்தாடு கின்றது பாட்டு.

நாளையே காண்டி அன்றே?
நான்உனக்(கு) உரைப்ப தென்னோ?

என்று சொல்லிவிட்டா ளல்லவா? 'நாளைக்கே சீதை ராவணனுக்குக் கிடைத்து விடுவாள்' என்று அரக்கி நம்புகிறாள். அப்படியானால் நாளைக்கே ராமனும் தனக்குக் கிடைத்துவிட வேண்டும். இதனால் காதல் — நோக்க மும் பழிக்குப் பழி வாங்கும் நோக்கமும் ஒருங்கே நிறைவேறிவிடு மல்லவா? அரக்கியின் இந்தப் பேராசை 'மீன் கொண்டு ஊடாடும்' சமுத்திர அலை களைப் போல் இவள் இதயத்திலே வீசுகின்ற கோஷத்தை அப்படியே பார்க் கிறோம் இந்தக் கவியிலே.

சோக நாடகம்

தன்னைக் குறித்து அண்ணனுக்குச் சந்தேகம் ஏற்படாமல் இருப் பதற்காக ஒரு சோக நாடகத்தையும் ஆடிக் காட்டுகிறாள். 'அப்பேர்ப் பட்ட சீதையை உன்னிடம் கொண்டு சேர்க்க வேண்டுமென்று நினைத் தேன், நெருங்கினேன். அந்த ராமன் தம்பி பளிச்சென்று எங்களுக்கு நடுவே வந்துவிட்டான். இடை புகுந்து இலங்கியது வாள் — மூக்கை அரிந்து விட்டான். அப்போதே முடிந்து போயிற்று என் வாழ்வும்! சீதை யைப் பற்றிய செய்தியை உன்னிடம் சொன்ன பின்பு உயிரைவிட வேண்டு மென்றுதான் இங்கு வந்தேன்!' என்று அப்படியே உருகிப் போகிறாள் அரக்கி அந்தச் சோகத்திலே :

'அன்னவள் தன்னை உன்பால்
உய்ப்ப(ல்) என்(று) அணுக லுற்ற
என்னை,அவ் இராமன் தம்பி
இடைபுகுந்(து) இலங்கு வாளால்
முன்னைமூக்(கு) அரிந்து விட்டான் ;
முடிந்த(து)என் வாழ்வும்; உன்னின்
சொன்னபின், உயிரை நீப்பான்
துணிந்தனென்' என்னச் சொன்னாள்.

[அன்னவள்—அப்படிப்பட்ட சீதை. உன்பால்—உன்னிடம். உய்ப்பல்— உய்ப்பேன்; சேர்ப்பேன். அணுகல் உற்ற—அணுகிய; நெருங்கிய. இலங்கு— விளங்குகின்ற. முன்னை மூக்கு—முற்பட்டுத் தோன்றிய சிறந்த மூக்கு. உன்னின்—உன்னிடத்தில். உயிரை நீப்பான்—உயிரை விடும்படி.]

என்ன மறதி !

சீதை வருணனைப் பிரபந்தத்தின் இறுதியிலே ஆசிரியை வெளியிட்ட சிங்கார ரஸத்தையாவது சோக ரஸத்தையாவது ராவணனால் அனுபவிக்க முடியவில்லை. அவனுக்காகவே அந்த அருமந்த மூக்கை அவள் தியாகம்

செய்ததாகத் தெரிவித்தும் அதற்காக அவன் நன்றி அறிவிக்கவும் இல்லை. காரணம்?—மறதிதான்.

கரனையும் மறந்தான், தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான், உற்ற
பழியையும் மறந்தான், வெற்றி
அரனையும் கொண்ட காமன்
அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான், கேட்ட
மங்கையை மறந்தி லாதான்!

[கடிந்து நின்றான் - அறுத்து நின்றவன். உரன் - வலிமை. வெற்றி அரனையும் கொண்ட — அரனையும் வெற்றி கொண்ட; சிவபெருமானையும் வென்றுவிட்ட. முன்னை - முன்பு. வரன் - வரம்.]

கரன் பட்ட செய்தி யெல்லாம் மறந்து போய்விட்டது. தங்கை மூக்கும் மறந்துவிட்டது. மூக்கறுப்பைத் துணிந்து செய்தவனுக்கு எவ்வளவு வலிமை - எவ்வளவு நெஞ்சுரம் - இருக்கவேண்டும் என்ற அந்த நினைப்பும் போய்விட்டது. தம்பியர் பட்டதாலும், தங்கை அங்க பங்கப் பட்டதாலும் தனக்கு நேர்ந்த பெரும்பழியையும் மறந்து விட்டான். என்ன தவஞ் செய்து எத்தகைய வரப் பிரசாதம் பெற்றிருக்கிறோம்!—இதையும் மறந்து போனான் என்றுதான் சொல்லவேண்டி யிருக்கிறது. 'இத்தகைய பழி பொருந்த இடம் கொடுக்கலாகாது' என்பதை நினைத்தும் பார்க்கவில்லையே!

உளநூலார் உவந்தும் வியந்தும் பாராட்டுமாறு காதலின் ஆழ்ந்த தத்துவமொன்று பிரத்தியட்சமாகிற தல்லவா இந்தப் பாட்டிலே? எத்



தகைய அபூர்வ எளிமையுடன் இந்த மனோதத்துவ ஞானம் வெளிப்படுகிறது பாருங்கள்!

'மறந்தான், மறந்தான், மறந்தான், மறந்தான்' என்று வருவது நாலு திசையும் மறதியே சூழ்ந்து கொண்டது போலக் காட்டுகிறது மறதியின்மையை! 'மணல், மணல், மணல், மணல்' என்று நாலுதிசையும் பாலைவன யாத்திரிகனை எல்லையற்ற மணல்வெளி சூழ்ந்துகொண்டது போலவும், 'பொய், பொய், பொய், பொய்' என்று நாலுதிசையும் பயனற்ற ராஜதந்திரம், காந்தியடிகளின் மெய்வழி செல்லாத அரசியல்வாதிகளைச் சூழ்ந்து கொள்வது போலவும், மறதி சூழ்ந்துகொள்கிறது காம பரவசனான ராவணேசுவரனை.

* * * *

சாதாரணமாகக் 'கண்டதும் காதல்' என்கிறார்கள். 'கண் வழிப் புகுந்த காதல்' என்கிறார்கள். அரக்கியின் காதல்கூட இந்த இனத்தைச் சேர்ந்தது தான். அரக்கனோ 'கேட்ட மங்கையை மறந்திலாதான்'— 'கேட்டதும் காதல்' இது; காது வழியாக வருகிறது காதல்! ராவணேசுவரனல்லவா?—இருபது காதுகள் வழியாகப் புகுந்து, வளரும் காதல்!

'கண்வழிப் புகுந்த காதலை'க் காட்டிலும் வேகமாய் வளர்ந்து பெருகும் இந்தக் காதலை மறக்கவும் முடியுமா?

சிற்றிடைச் சீதை என்னும்
நாமமும் சிந்தை தானும்
உற்றிரண்(டு) ஒன்றாய் நின்றால்,
ஒன்றொழிந்(து) ஒன்றை யுன்ன
மற்றொரு மனமும் உண்டோ?
மறக்கலாம் வழிமற்(று) யாதோ?

[நாமம் - பெயர். உற்ற இரண்டு ஒன்றாய் நின்றால் - (பெயரும் சிந்தையும் ஆகிய) இரண்டு பொருள்களும் பொருந்தி ஒன்றாகி விட்டால். உன்ன - நினைக்க.]

பத்துத் தலை ராவணனுக்கும் உள்ளது ஒரு மனம் தானே; அந்த மனமோ சீதை பெயரோடு லயித்து, அத்வைதிகள் சொல்கிறபடி அதுவுடன் அதுவாகி விட்டது! இப்படி இரண்டறக் கலந்த நிலையில் சீதை பெயர் வேறு, ராவணன் சிந்தை வேறு என்று பிரித்துப் பார்ப்பதே இயலாத காரியம். இந்த நிலையில் மறப்பது எப்படி? நினைப்பது எப்படி? கொல்லுண்ட சகோதரவர்க்கம், அரியுண்ட மூக்கு, வந்தடைந்த பழி, எதிரி பலம் முதலியவற்றுள் எதையாவது எப்படி நினைத்துப் பார்க்க இயலும்? ராவணனுக்குத்தான் 'சிந்தை வேறு சீதை வேறு' என்பது இல்லையே இப்போது!

கண் வழி நுழைந்த காதல் என்ன பாடு படுத்தியது சீதா ராமர்களையும்!—என்பதைப் பால காண்டத்தில் வருணித்திருக்கிறான் கவிஞன். இந்த ஆரணிய காண்டத்திலே கண்வழி நுழைந்த காதலால் அரக்கி பட்ட பாட்டையும் கண்டோம். இனி, காது வழி வந்த காதலால் அரக்கன் அனுபவிக்கும் விரகதாபத்தையும் காண்போம்.

காது வழியே காதல் — பொருத்தமாக இல்லையா, என்ன? காதும் காதலும் எப்படி இசைந்து விட்டன, சீதையும் சிந்தையும் போலே!



276. வண்டு குடைந்த மரம்

குயிலாகப் பாடினாள் அரக்கி. அந்த அழகு மயிலாகி அப்படியே சிறைப் பட்டு விட்டதாம்,—அசோக வனத்தில் சிறைப்படுவதற்கு முந்தியே. எங்கே, எப்படி? இதோ,

மயிலுடைச் சாயலாளை
வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான்.

[வஞ்சியா முன்னம் - வஞ்சிப்பதற்கு முன்பே; வஞ்சித்துச் சிறை வைப்பதற்கு முன்பே. எயில் - மதில்; மதிற்காவல்.]

தனிமை நாடிய தாபம்

இந்தச் சிறை வைப்பில் முதல் முதல் கஷ்டம் கைதிக்கல்ல; சிறைக் குத்தான்! சிறைவைத்த வைரநெஞ்சு வெண்ணெய்போல் உருகிற்று:

அயிலுடை அரக்கன் உள்ளம்,
அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற
வெண்ணெய்போல் வெதும்பிற் றன்றே.

[அயில் - வேலாயுதம். அவ்வழி - அப்பொழுது. நாள் - (இங்கே) பொழுது. உற்ற - பொருந்திய. வெதும்பிற்று - வெப்பங் கொண்டு உருகிற்று.]

உடனே ராவணன் சிங்காசனத்தைவிட்டு எழுந்திருந்தான், சபையை விட்டுக் கிளம்பிவிட வேண்டியதுதான் என்று. அந்த நிலையில் அங்கே இருப்பது சரியில்லை என்று, வழக்கமாய்ச் சபை கலைந்து போகின்ற

னோத்திற்கு முன்பே எழுந்து அரண்மனைக்குள்ளே போகிறான். கொலுவை வெறுத்துத் தனிமை நாடுகிறது உள்ளம். தாபத்தை எப்படித் தணித்துக் கொள்வது ? நெஞ்சிலே சிறைவைத்த மயிலைக் கண்ணாரக் காண்பதுதான் எப்படி? இந்த ஆலோசனைகளுக்காக அரண்மனைக்குள்ளும் தனியறைக்கே போக வேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

சம்பிரதாயச் சடங்கு

ராவணன் சிங்காசனத்திலிருந்து எழுந்ததும் சபை கலையும் சம்பிரதாய வைபவங்கள் நடைபெற வேண்டுமல்லவா ?

எழுந்தனன் இருக்கை நின்(று)ஆண்(டு);
 ஏழுல கத்து ளோரும்
மொழிந்தனர் ஆசி; ஓசை
 முழங்கின சங்கம்; எங்கும்
பொழிந்தன பூவின் மாரி;
 போயினர் புறத்தோ ரெல்லாம்;
அழிந்தழி சிந்தை யோடும்
 ஆடகக் கோயில் புக்கான்.

[இருக்கை-சிங்காசனம். ஆண்டு-அப்பொழுது. சங்கம்-சங்குகள். புறத்தோர் - பக்கங்களில் உள்ளவர்கள். அழிந்து அழிசிந்தை - மேலும் மேலும் அழிகின்ற மனம். ஆடகக் கோயில்-பொன் மயமான அரண்மனை. புக்கான்-புகுந்தான்.]

ஏழு லோகத்திலிருந்தும் சபைக்கு வந்திருந்த பெரியோர்கள் ஆசி மழை பொழிந்தார்களாம் சக்ரவர்த்தி எழுந்ததும். போகும் வழியில் பூ மழை. இந்த இரண்டு மழைகளையும் சங்க வாத்தியங்களின் முழக்கங்களுக்கிடையே அனுபவித்துக் கொண்டு போனான் வழக்கம்போல். ஆனால் சிந்தை குளிராமல் போனான். மேலே மேலே போகிறது சம்பிரதாய படாடோபம். சக்ரவர்த்தியின் சிந்தையோ இப்போது மேலும் மேலும் அழிகின்றது.

உரம் குடைந்த மலர்

ராவணன் தனியாக ஓர் அறைக்குள் சென்றான். அங்கே உட்கார்ந்து ஆலோசிக்கவும் இயலாமல் படுக்கையில் சாய்ந்தான். குளிர்ந்த பனிநீர் தெளித்த மலர்ப் படுக்கைதான். எனினும் நெஞ்சு போல் அம்மலர்களும் கருகியது தவிர வேறு பலன் இல்லை — ஓய்வு கிடைக்க வில்லை. காற்று நறுமணம் சுமந்து மந்தகதியில் தான் வந்தது. எனினும் உள்ளம் வெதும்பி உடல் வெதும்பி உயிரும் வெந்து கொண்டிருப்பது போல் அவ்வளவு புழுக்கமான ஓர் உணர்ச்சி;

ஆக்கை தீய உள்ளம் நைய
 ஆவி வேவ தாயினான்.

[ஆக்கை — உடம்பு.]

எவ்விதமான சைத்தியோபசாரமும் பயன்படவில்லை யென்றால், ஆலோசனைக்கு வழி ஏது ?


திக்கொடு திக் - அந்தங்களையும் வென்று வலியழித்த மகாவீரம் இப்போது என்ன பாடு படுகிறது !

பரம்கி டந்த மாதி ரம்சு-
மந்த பாழி யானையின்
கரம்கி டந்த கொம்பொடிந்தி-
ரங்க வென்ற காவலன்,
மரம்கு டைந்த தும்பி போல் அ-
நங்கன் வாளி வந்துவந்(து)
உரம்கு டைந்து நொந்து நொந்(து)உ-
லைந்து லைந்தொ துங்கினான்.

[பரம் - பாரம். மாதிரம் - திக்குக்கள். பாழி - வலிமை. கரம் கிடந்த கொம்பு - துதிக்கையிலே பொருந்திக் கிடந்த தந்தங்கள். ஒடிந்து இரங்க - ஒடித்ததால் (அந்த யானைகள்) வருந்தும்படி. காவலன் - சக்ர வர்த்தியான ராவணன். தும்பி - வண்டுகள். அநங்கன் வாளி - மன்மத பாணங்கள். உரம் - மார்பு. குடைந்து நொந்து - குடைய அதனால் நோவு பட்டு. ஒதுங்கினான் - ஒடுங்கிக் கிடந்தான்.]

திக்கு யானைகளின் முரட்டுத் தந்தங்களையும் எளிதில் முறித்த அந்த மார்பு இப்போது காமம் என்ற மெல்லிய மலரம்புகளால் இப்படி அழிக்கப் படுகிறதே என்றால், 'மரம் குடைந்த தும்பி போல்' ஆகிவிட்டது என்கி றான் கவிஞன். கொலராடோ என்ற இடத்தில் நானூறு ஆண்டுகளாகப் புயல் காற்றுகளையும் சமாளித்து நின்ற ஒரு ராட்சஸ மரத்தைச் சின்னஞ் சிறு வண்டுகள் அழித்து விட்டனவாம். நமது தென்னிந்தியக் காடுகளி லும் புயலை வென்ற ராட்சஸ மரங்கள் தும்பி என்ற சிறு வண்டுகளால் வலியழிந்து ஒடுங்கிப் போன தோற்றங்களைக் கம்பன் பார்த்திருக்கக்கூடும்.

உள்ளிருந்து வெளியே



இருக்கையிலும் இருக்க முடிய வில்லை, படுக்கையிலும் கிடக்க முடிய வில்லை. 'இந்த மாளிகைக்குள்ளே ஒதுங்கி யிருக்கவும் முடியவில்லையே; வெளியே மரங்கள் நிறைந்த ஒரு சோலை குளிர்ச்சியாக இருக்கும்' என்று எண்ணினான். உடனே படுக்கையிலிருந்து எழுந்து நின்றான். 'இன்னது செய்வோம்' என்ற உறுதியான எண்ணமும் இல்லாமல் அவஸ்தைப் படுகின்றவ

ணுய்ப் புறப்பட்டான். அந்தக் குறிப்பு அறிந்ததும் உடனே வந்துவிட்டார் களாம் பெண்மணிகள் அணியணியாக மணிவிளக்குகள் ஏந்திய வண்ணம்.

ராவணன் அழுங்கிய சிந்தையுடன் சோலையூடு போகும் பரிதாபத்தையும், யாழைப் பழித்த சொற்களால் ஒருவருக்கொருவர் சக்ரவர்த்தியின் குறிப்பை உணர்த்திய வண்ணம் ராவண விஜயத்தை முன்னிட்டுப் பணிப் பெண்கள்—பொன்மேனியர்—பைம்பொழிலைத் தீபமாலையிட்டு அலங்கரிப் பவர் போல் போய்க் கொண்டிருக்கும் அழகையும் இதோ பாருங்கள் :

> அன்ன காலை அங்கு நின்றெ—
> ழுந்த ழுங்கு சிந்தையான்,
> இன்ன வாறு செய்வென் என்றோர்
> எண்ணி லாதி ரங்குவான்,
> பன்னு கோடி தீப மாலை
> பாலை யாழ்ப ழித்தசொல்
> பொன்ன னார்எ டுக்க அங்கொர்
> சோலை யூடு போயினான்.

[அன்னகாலை — அட்பொழுது. அழுங்கு — வருந்திய. இரங்குவான் — வருந்துவானாகி. பன்னு — சிறப்பாய்ச் சொல்லத் தக்க. கோடி — (இங்கே) மிகப் பல. தீபமாலை — மாலைபோல் தீப வரிசைகள். பாலை யாழ் — பாலை என்ற பண்ணுக்கு இசைந்த யாழ். பொன்னனார் — பொன்போன்ற மாதர்கள்.]

இந்தச் சோலையில் ஒரு வசந்த மண்டபம்; சிவந்த பொன்மயமாக இருக்கிறது. ராவணன் எப்போது வந்தாலும் சயனித்துக் கொள்ளும்படி அப்போதப்போது புதிது புதிதாக மலர்மெத்தை பரப்பி வைத்திருக்கிறது. அந்த மஞ்சத்தில் பால்நிற வெண்பட்டு விரித்திருக்கிறது. அந்தப் படுக்கையில் தளர்ந்து படுத்துக் கொள்கிறான் ராவணன்.

> தேனுகு சோலை நாப்பண்,
> செம்பொன்மண் டபத்துள், ஆங்கோர்
> பால்நிற அமளி சேர்ந்தான்,
> பையுள்உற்(று) உயங்கி நைவான்!


[தேன் உகு — தேன் சிந்துகிற. நாப்பண் — நடுவிலுள்ள. அமளி — படுக்கை. பையுள்உற்ற உயங்கி — நோய் அதிகரிக்க வருந்தி.]

ராவணன் சோலைக்குள் வந்ததும், அதற்குமுன் அங்கே பாடிக் கொண்டிருந்த குயில்களும், மழலைச் சொற்களைச் சொல்லிக் கொண்டிருந்த கிளிப்பிள்ளைகளும் வேறு பறவைகளும்அஞ்சி மௌனமாகிவிட்டன.

> இனியன மிழற்று கின்ற
> யாவையும், இலங்கை வேந்தன்
> முனியும்என்(று) அவிந்த வாய,
> மூங்கையர் போன்ற அன்றே!

[மிழற்றுகின்ற — கொஞ்சி வெளியிடுகின்ற. முனியும் — கோபிப்பான். அவிந்த — பேச்சு அவிந்த. வாய — வாயை உடையவனாய். மூங்கையர் — ஊமைகள்.]

ராவணேசுவரனல்லவா? சோலையிலும் கப்சிப் தர்பார். வண்டு குடைந்த மரம் தான், ஆனால் விருட்ச ராஜா அல்லவா?



277. காலமும் காலனும்

ஆஸ்தான மண்டபம் திடீரென்று வெப்பமாகி விட்டதென்று அரண்மனைக்குள்ளே போனவனைப் பள்ளியறையும் வெதுப்பி விட்டது. பளிச்சென்று அங்கேயிருந்து இளம்பிச் சோலைக்கு வந்து சேர்ந்ததும் அந்தப் பசுஞ்சோலை, நடுவிலுள்ள வசந்த மண்டபம், அதற்கு நடுவில் புதிய பூக்களைப் பரப்பி அமைத்திருந்த மெத்தை, மஞ்சம் எல்லாம் அப்படியே கதகதவென்று எரியத் தொடங்கி விட்டன! பூ மணத்தோடு தவழ்ந்த தென்றலும் தீ-மூச்சு விட்டது. மன்மத பாணங்கள் துளைத்த புண்களில் பசும் பனியும் நெருப்பாகக் கொட்டியது. அப்போது பின் பனிக் காலம்.

தாபம் வரவர அதிகப்படுகிறது. இது என்ன கால இயல்பு?

'இருதுத்தான் யாத டா?'என்(று)
இயம்பினன், இயம்ப லோடும்,
வெருவிப் போய்ச் சிசிரம் நீங்கி,
வேனில்வந்(து) இறுத்த தன்றே!

[இருது—பருவகாலம். வெருவி—பயந்து. சிசிரம்-பின்பனிக் காலம். வேனில்-(இங்கே) இளவேனிற் காலம். இறுத்தது-சேர்ந்து தங்கியது.]

பனியும் நெருப்பாக விழத் திடுக்கிட்ட ராவணன், 'காலந்தான் யாத டா?' என்று கர்ஜித்த அந்தக் கேள்வியிலேயே, நடுங்கிப் போய் நழுவி விட்டதாம் சிசிரம் என்ற பின்பனிக் காலம். பின்பனி போனதும் அடுத்த பருவமாகிய இளவேனில் வந்துவிடுகிறது காலக் கிரமத்திலே. பருவ காலத்தையும் மாற்றிவைக்கும் கொடிய ஆணைகளோடு கூடிய ஸர்வாதிகாரி ராவணன் என்பது குறிப்பு. மாசி-பங்குனி பின்பனிக் காலம்; சித்திரை-வைகாசி இளவேனிற் பருவம். இப் பருவங்களுக்கு இடையே இரண்டொரு மாதத்தைக் காலக் கணக்கிலிருந்து கழித்து விட்டான் அல்லது அழித்து விட்டான் ராவணேசுவரன்! — எந்த 'ரப்பர்' போட்டு எப்படித் துடைத்தானோ? எந்தக் கணித முறையில் எப்படிக் கழித்தானோ?

இத்தகைய சுயேச்சையுள்ள ஸர்வாதிகாரிக்கும் சுதந்திரம் இருப்பதாகத் தெரியவில்லை. காலத்தைக் குறைக்கவிட்டால் என்ன? ஞாலத்தையே குறைக்கவிட்டால் என்ன? அருள் இல்லாத இடத்தில் மருள் (மயக்கம்) வந்து விடுகிறதே! காமதாபத்தைக் கால தாபம் என்றுதானே மயங்குகிறான்? சுதந்திர புத்திக்கு அறிவுத் தெளிவு வேண்டும்; சீலம் வேண்டும்:

காலத்தால் வருவ தொன்றோ?
காமத்தால் கனலும் வெந்தீ,
சீலத்தால் அவிவ தன்றிச்
செய்யத்தான் ஆவ துண்டோ?

[வெந்தீ – கொடிய தீ.]


சித்த சக்தி

சீலம் அல்லது நல்லொழுக்கம் சித்த சக்திக்கு இன்றியமையாதது. இன்பமும் துன்பமும் உள்ளத்தோடு இசைந்தவை யென்று தெளிந்து சீலத்தில் நிலைபெறும் சித்த சக்தியே கால தேசங்களையும் உண்மையில் கட்டுப்படுத்த வல்லது; காமத்தையும் மட்டுப்படுத்தி நல்வழிப்படுத்தவும் வல்லது. ராவணனைப் போன்ற ஸர்வாதிகாரிகள் எவ்வளவு சக்தியுள்ளவர்களாகத் தோன்றிய போதிலும், 'ஸர்வசக்தி'யுள்ளவர்களாகத் தோன்றியபோதிலும், உண்மையில் சக்தியுள்ளவர்கள் அல்ல! ஏன்? தூய சித்த சக்தியல்லவா உண்மையான சக்தி?

இந்தச் சித்த சக்தியில்லாத ராவணனுக்குப் பருவகாலம் மாறிவிட்ட போதிலும் தாபம் சிறிதும்



மாறவில்லை. பனியே எரிந்ததென்றால் வேனிலைச் சொல்லவா வேண்டும்?



வன்பணை மரமும் தீய,
மலைகளும் குளிர வாழும்
மென்பனி எரிந்த(து) என்றால்,
வேனிலை விளம்ப லாமோ?
அன்பெனும் விடம்உண் டாரை
ஆற்றலாம் மருந்தும்
உண்டோ?
இன்பமும் துன்பம் தானும்
உள்ளத்தோ(டு) இயைந்த
அன்றே?

[வன்பணை – வலிய கிளைகள். தீய – (இங்கே) தீயினால் கருகினது போல் கரிந்து தீந்து போக. வாழும் – (இங்கே) படிந்து தங்கும். மென் பனி – மெல்லிய பனி. விடம் – விஷம். ஆற்றலாம் – ஆற்றக்கூடிய. இயைந்த – இசைந்தவை.]

பனிக் காலத்திலே மிகக் குளிர்ச்சியான பிரதேசங்களில் மரங்கள் தீயினால் கருகி நிற்பதுபோல் இலை உதிர்ந்து நிற்பதுண்டு. கம்பன் இத்தகைய உறைபனிப் பிரதேசங்களையும் பார்த்திருக்கக்கூடும் அல்லது கேட்டிருக்கக்கூடும். வெயிலில் மற்றப் பொருள்களைக் காட்டிலும் குளிர்ந்திருக்கும் மரங்களையும் கொடுங் குளிரால் கரிந்து தீந்துபோகச் செய்கிறது கடும் பனி. இதே பனி, வெயிலில் மற்றப் பொருள்களைக் காட்டிலும் வெப்பமாயிருக்கும் மலைகளையும் குளிரச் செய்கிறது. இத்தகைய மலைப் பிரதேசங்களையும் கம்பன் அறிந்திருக்கிறான்.

அன்பே அமுதம்; அன்பே விஷம்

இத்தகைய பனியும் ராவணனுக்கு எரிந்த தென்றால், வேனில் எரிந்ததென்று சொல்லவும் வேண்டுமா? அன்பை அமுதமாகக் கொள்ளாமல் விஷமாக உட்கொண்டானும் ராவணன் — காது வழியாகப் புகுந்த அந்த விஷம் தான்! இந்த விஷம் பருவகாலம் மாறினாலும் குணமாகாது; விஷ வைத்திய சாஸ்திரத்திற்கு இணங்க மருந்து சாப்பிட்டாலும் குணமாகாது. 'இன்பமும் துன்பமும் உள்ளத்தோடு இசைந்தவை' என்ற உண்மை கண்டு, சீலத்தால் அவித்துக்கொள்ள வேண்டிய விஷாக்கினி அல்லவா? பனி போய் வேனில் வந்த கால மாறுபாட்டாலும் விரகதாபம் தணியவில்லை. அரண்மனை விட்டுச் சோலைக்கு வந்த இட மாறுபாட்டாலும் தாபம் தணியவில்லை. எனினும்,

இன்பமும் துன்பம் தானும்
உள்ளத்தோ(டு) இயைந்த அன்றே

என்ற உண்மையை ராவண ஸர்வாதிகாரி கண்டுகொள்ளவில்லை. காமாவேசத்தால் ராவணன் மறந்து விட்ட இந்த உண்மையை மில்டன் இயற்றிய 'சுவர்க்க நீக்க'த்தில் சாத்தனது வீராவேச மனநிலை உணர்ந்து கொள்கிறது. இதனால்தான் 'மனம் தனக்குள்ளே நரகத்தைச் சுவர்க்கமாக்கவும் சுவர்க்கத்தை நரகமாக்கவும் வல்லது' என்கிறான் சாத்தன்.

ராவணனது இந்த மனநிலையிலும் ஸர்வாதிகார ஆட்சி நடக்கிறது. அதனால்தானே பின் பனிக் காலம் ஓட்டம் பிடித்து வேனிற்காலம் 'ஆஜர்' ஆயிற்று. வேனில் போய் மழை வருகிறது. மாசி-பங்குனி நடக்கும் போதே ஐப்பசி - கார்த்திகையும் 'ஆஜர்' ஆகிவிடுகிறது. எது வந்தால் என்ன, எது போனால் என்ன? ராவணனுடைய மனத் துன்பத்திற்குக் குறைவில்லை. நேரே அடியாகப் பருவ காலங்களை யெல்லாம் ஒழித்துக் கட்டிக் காலக் கணக்கையே கிழித்தெறியும்படி ஆணை பிறக்கிறது.

கால பரிணாமம் இல்லாததால் உலகமெல்லாம் சுவர்க்கம் போலத் தோன்றியதாம். ஆனால் சுவர்க்கத்தை யெல்லாம் நரகமாக்கவல்ல மன நிலையன்றோ இப்போது இந்த ராட்சஸ ஸர்வாதிகாரியின் மனநிலை?

சந்திரனா, காலனா?

இந்தப் பரிதாப நிலையிலும் அதிரடியாக நடக்கும் அதிகார வைபவங்களுக்குக் குறைவில்லை. 'ஓடிப்போய்ச் சந்திரனைக் கொண்டு வாருங்கள்' என்று கட்டளை விழுகிறது அருகே நின்றவர்களின் காதிலே. சோலைக்கு வெளியே போய்ப் பார்க்கிறார்கள். அன்று பௌர்ணமி. எனினும் பூர்ண சந்திரன் இப்போது ராவணனுக்குள்ள கொடிய கோபம் கண்டு இலங்கைக்கு நேராகச் செல்ல அஞ்சி ஒரு புறமாக ஒதுங்கிப் போய்க் கொண்டிருக்கிறானாம். அந்தச் சந்திரனுக்கு இங்கே அபாயம் இல்லையென்று அபயம் அளிக்கிறார்களாம் ராட்சஸ ஏவலாளர்கள்:

வெஞ்சினத்(து) அரக்கன் ஆண்ட
　　வியனகர் மீது போக
நெஞ்சிலன், ஒதுங்கு கின்ற
　　நிறைமதி யோனை நோக்கி,
'அஞ்சலை, வருதி, நின்னை
　　அழைத்தனன் அரசன்' என்னச்,
சஞ்சலம் துறந்து தான், அச்
　　சந்திரன் உதிக்க லுற்றான்.

[வியல் நகர் — பெரிய நகரம். நெஞ்சு இலன் — நெஞ்சுத்துணிவு இல்லாதவனாகி. நிறைமதியோன் — பூர்ணசந்திரன். அஞ்சலை — அஞ்சாதே. வருதி — வருவாயாக.]

சந்திரன் என்றாலே சந்தோஷப்படுத்துகிறவன். ராவணன் இருந்த காமாவேச நிலையில் சந்தோஷப்படுத்த முடியாதே என்பது சந்திரனுக்குத் தெரியும். கோபாவேச நிலையும் கண்டு தான், சந்தோஷப்படுத்துகிறவனும் சந்தோஷம் துறந்து சஞ்சலப்பட்டு ஒதுங்கிப் போனான். 'நிறைமதி' யோனின் நிறைந்த மதி இது! அபயதானம் கிடைத்ததும் சஞ்சலம் துறந்து சந்தோஷமாக உதயம் செய்தான். ஆனால் ராவணனுக்கோ,

உயிர்தெறக் காலன் என்பான்
　　ஒத்தனன் உதயம் செய்தான்.

[தெற — அழிக்க.]

காலமும் காலனும் அஞ்சும் ராட்சஸேந்திரன் தான். எனினும் ஸர்வாதிகார உள்ளத்திற்குள்ளே இருந்து கொண்டு எல்லாரையும் பயமுறுத்தும் அந்தக் காலன் தான் இப்போது இவனையும் பயமுறுத்துகிறான், மண்ணிலிருந்தும் விண்ணிலிருந்தும்.



278. சந்திரனின் துயரம்

எரிந்து விழுகிறான். தீ நடுவே உருகிக் கொண்டிருக்கும் வெள்ளியின் உருக்கை அப்படி அள்ளி இறைத்தால் எரிந்து விழாமல் என் செய்வது? அப்படி வீசுகிறது வெண்ணிலா! ஓஹோ, சந்திரனைத்தானே? கொடிய நெருப்புக் கதிர்களுடனும் விஷக் கதிர்களுடனும் ஏதோ ஒரு சூரியனைத் தலைக்குமேல் கொண்டு வந்துவிட்டதாக அல்லவா சீறுகிறான் லங்கேசுவரன்? ஏன், இந்த மயக்கம் — ஞாயிறு திங்கள் தெரியாத மயக்கம்?

வெள்ளியும், மின்னலும்

வந்தது அமிர்த கிரணனாகிய திங்கள் தான் என்று உறுதி கூறுகிறான் கவிஞன். பாற்கடலில் (அருகேதான் இருக்கிறதாம் அந்தக் கடல்) உள்ள அமுதெலாம் அளைந்து வாரிப் பருகி வந்திருக்கிறானாம். வாரி இறைக்கவும் செய்கிறானாம்—கீழே பிரதாப லங்கேச்வரன் இருக்கிறானே என்பதையும் பாராமலே:

அருகுறு பாலின் வேலை
  அமுதெலாம் அளைந்து வாரிப்
பருகினன் பரந்து பாய்ந்த
  நிலாச்சுடர்ப் பனிமென் கற்றை,
நெரியுறு புருவச் செங்கண்
  அரக்கற்கு, நெருப்பின் நாப்பண்
உருகிய வெள்ளி அள்ளி
  வீசினால் ஒத்த தன்றே!

[அருகுஉறு—அருகில் பொருந்திய. வேலை—சமுத்திரம். பருகினன்-பருகி. மென்கற்றை-மெல்லிய தொகுதி. நெரியுறு-(கோபத்தால) நெரித்த. அரக்கற்கு-அரக்கனுக்கு. நாப்பண்-நடுவே.]

'பரந்து பாய்ந்த நிலாச் சுடர்ப் பனிமென் கற்றை—என்ன அழகான முத்துக் கோத்தாற் போன்ற சொற்றொடர்! இப்படி விழும் நிலாச் சுடர்களுக்கிடையே பார்க்கிறோம், கோபத்தால் புருவங்களை நெரித்துக் கொண்டு கண் சிவக்க வீற்றிருக்கும், அரக்கர்கோனை. நிலாச் சுடர்களா விழுகின்றன இவன்மீது? உருக்கிய வெள்ளி அப்படியே நெருப்பின் நடுவிலிருந்து வாரி இறைக்கப்படுகிறது. இதுவா சந்திரன்? ஒரு புதிய கொடிய விஷ சூரியன் அல்லவா?' என்று அரக்கன் எரிந்து விழுந்ததில் தான் என்ன அதிசயம்?

வீசுவது பால் நிலா; விழுவதோ வெள்ளி, உருகிய வெள்ளி, தழல் குறையாத வெள்ளி உருக்கு! இதே நிலாக் கதிர்கள், 'சில மின்னல்கள் வான வெளியில் மட்டுமல்ல, நிலத்திலும் திரிகின்றனவோ?' என்று அதிசயிக்குமாறும் அங்குமிங்கும் உலாவுகின்றன ராவணன் இருக்கும் சோலையில், காற்றிலே இலைகளும் கிளைகளும் அலையும்போது :—

> மின்நிலம் திரிந்த தன்ன
> விழும்நிலா.

[திரிந்தது அன்ன - திரிந்தது போன்ற.]

'புகழெனச் சுட்டது'

ஆனால் இந்த இயற்கையழகை ராவணனால் இப்போது அனுபவிக்க முடியுமா —'சுடுகிறதே வெண்ணிலா' என்று அவஸ்தைப்படும் இந்த மன நிலையிலே. 'உருகிய வெள்ளி'யைக் காட்டிலும் சுடுகிறதாம் மின்னல் போலத் திரியும் நிலாச்சுடர். ஆம், புகழ் போலச் சுடுகிறதாம் :

> மின்நிலம் திரிந்த தன்ன
> விழும்நிலா, மிதிலை சூழ்ந்த
> செந்நெலங் கழனி நாடன்
> திருமகள் செவ்வி கேளா
> நன்னலம் தொலைந்து சோரும்
> அரக்கனை, நாளும் தோலாத்
> துன்னலன் ஒருவன் பெற்ற
> புகழெனச் சுட்ட தன்றே!

[செந்நெல் அம் கழனி நாடன் — செந்நெற்பயிர் செழித்திருக்கும் அழகிய கழனிகளையுடைய நாட்டின் அரசனாகிய ஜனகன். செவ்வி — வடிவழகு. கேளா — கேட்டு. நன்னலம் — சிறந்த ஆற்றல். சோரும் — சோர்ந்துபோகும். நாளும் — எக்காலும். தோலா — தோல்வியடையாத. துன்னலன் — பகைவன்.]

சோலைக்கு இடையே நிலாச்சுடர்கள் விழுந்து திரிவதையும், வெளியே அந்த நிலவு வெள்ளத்தில் செந்நெற்பயிர் களிப்பதையும் பார்த்துப் பார்த்துக் களித்திருக்கவேண்டும் இக்கவிஞன்; இந்த இயற்கையழகுப் பாற்கடலை அளைந்து வாரிப் பருகியிருக்கவேண்டும். தன்னைக் களிப்பித்த அந்த அழகை அப்படியே நமக்கும் அள்ளி வீசுவதுபோல் வந்து விழுகின்றன, 'நிலாக் காட்சி'யான இந்த இரண்டு பாடல்களும்.

அனுதாபமும், கோபதாபமும்

சந்திரன் சந்திரன்தான் என்பதைச் சித்தாந்தம் செய்வதே ராவண சேவகர்களுக்கு வெகு சிரமமாகிவிடுகிறது. தெரிந்ததும் ராவண கோபம்

பொங்கிவிடுமோ தன்னை ஹிம்ஸிக்கும் சந்திரன்மீது—என்று ஆலோசிக்கிறீர்களா? அவ்வளவு தர்க்க ரீதியாகக் காரியங்கள் நடைபெறுமென்று இப்போது எண்ண இடமில்லை. சந்திரன்மீது ஓரளவு அனுதாபமும் பிறக்கிறது. அரக்கர் கோனுக்கு :

தேயா நின்றாய்; மெய்வெளுத்தாய்;
உள்ளம் கறுத்தாய்; நிலைதிரிந்து
காயா நின்றாய் ஒருநீயும்
கண்டார் சொல்லக் கேட்டாயோ?

[தேயாநின்றாய் - (உடல்) தேய்ந்து கொண்டிருக்கிறாய். மெய் வெளுத்தாய் – உடல் வெளுத்துக் காண்கிறாய். உள்ளம் கறுத்தாய் – இருண்டு போனாய்; உள்ளிடம் களங்கம் அடைந்தாய். காயா நின்றாய் – காய்கின்றாய்; தபிக்கிறாய். ஒரு உள்ளம் நீ - தனியனான நீ.]

தன்னுடைய தாபம் தணித்துக் கொள்ளலாமென்று சந்திரனை அழைத்தால், அவனும் இவன் போல் தாபத்தால் தவித்துக் கொண்டிருக்கிறானாம். 'அட சந்திரா, நீயும் என்னைப்போல் உடல் தேய்ந்து வெளுத்து உள்ளம் கருகி நிலை திரிந்து காய்ந்து கொண்டிருக்கிறாயே; சீதையைக் குறித்துக் கண்டவர் சொல்லக் கேட்டுத்தான் உனக்கும் இந்தக் கதி வந்துவிட்



டதா ?' என்று சந்திரனுக்காகவும் பரிதவிக்கும் ராவணேசுவரனைப் பாருங்கள். பார்த்ீர்களா இரண்டு ஸமதுக்கிகளையும் ?— மேலே சந்திரன், கீழே ராட்சஸேந்திரன். இருவருக்கும் துன்பத்திலே தோழமை — பரீட்சையில் தோற்றபோன இரண்டு மாணுக்கர்களுக்கு இடையே ஏற்படும் தோழமை போல!

கண்டார் சொல்லக்
கேட்டாயோ ?

என்ற கேள்வியில் தான் என்ன அனுதாபம், எவ்வளவு பரிதாபம்! காது வழியே புகுந்த காதல் படுத்தும் பாடு இந்தக் கேள்வியில் எப்படிப் பிரதிபலிக்கிறது, பாருங்கள்!

திடீரென்று அனுதாபம் ஆத்திரமாகிக் கோபதாபமாகி விடுகிறது. நினைப்பிற்கும் வெறுப்பாகிறுன் சந்திரன். பரிதாப நிலையிலும் அதிகார தோரணைக்குக் குறைவில்லை. 'இந்த இரவையும் சந்திரனையும் ஒழித்து விட்டு முன்பு இருந்த பகலையும் சூரியனையும் கொண்டு வாருங்கள்' என்று கர்ஜித்ததும், பகலும் பகலோனும் தோன்றுகிறார்களாம் கிழக்கே :

உன்னற்(கு) அறிய உடுபதியும்
இரவும் ஒழிந்த ஒருநொடியில் ;
பன்னற்(கு) அரிய பகலவனும்
பகலும் வந்து பரந்தவால்.

[உன்னற்கு அரிய — (இப்போது) நினைத்தற்கும் வேண்டாத. உடுபதி — நட்சத்திரங்களுக்குத் தலைவனுன சந்திரன். பன்னற்கு அரிய — புகழ்ந்து பேசுவதற்கு அரிய. பகலவன் — சூரியன். பரந்த — பரவின.]

கிழக்கு வெளுத்ததும் சந்திரன் ஒரே வெட்கமாகி, ஒளி மழுங்கிப் போகிறுன். கிழக்குத் திசையிலே சூரியன் வந்து சேர, எதிர்த் திசையிலே நாணி ஒளி மழுங்கி ஒரு பக்கமாகச் சாய்ந்து போகும் சந்திரனைப் பார்த்திருக்கிறீர்களல்லவா ? இந்தக் காட்சியைத் தான் இந்தக் கவியுள்ளம் எப்படி அனுபவித்து நம்மையும் அனுபவிக்கச் செய்கிறது பாருங்கள் :

நாணி, நின்ற ஒளிமழுங்கி,
நடுங்கா நின்ற உடம்பினனுய்ச்
சேணில் நின்று புறம்சாய்ந்து,
கங்குல் — தாரம் பின்செல்ல,
பூணின் வெய்யோன் ஒருதிசையே
புகுதப், போவான் — புகழ்வேந்தர்
ஆணை செல்ல நிலை அழிந்த
அரசர் போன்றுன், அல்ஆண்டான்.

[நடுங்கா நின்ற — நடுக்கம் அடைந்த. சேணில் நின்றும்—நடு வானத்திலிருந்து. புறம் சாய்ந்து — ஒரு பக்கமாகச் சாய்ந்து. கங்குல் தாரம் — இரவாகிய தன் மனைவி. பூணின் — (உலகத்துக்கு) ஓர் ஆபரணம் போல. வெய்யோன் — சூரியன். புகுத — வந்து சேர்ந்ததால். போவான் — அப்பால் போகிறவன். அல் ஆண்டான் — ராத்திரி-ராஜாவான சந்திரன்.]

என்ன வசீகரமான இயற்கை வருணனை! 'கங்குல் — தாரம் பின் செல்ல'ப் போகும் சந்திரனும், கிழக்கே ஓர் ஆபரணம் போலத் தோன்றும் சூரியனும்—நான் என் இளைத்துப்போன என் வசனத்தில் வருணித்துப் பார்க்கவேண்டும் ?



சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ



279. இருட்டையும் காண்போம்

பதவியிழந்த ராஜா, பதவியிழந்த ராணி பின் தொடரக் குழந்தை குட்டிகளோடு ராஜ பாதையை விட்டு விலகி நாணி நடுங்கி நடப்பதென்றால், எவ்வளவு பரிதாபமான காட்சி! இதே சமயம் புதிய ராஜா தங்கச் சிங்காதனத்தில் அமர்ந்து விட்டானே, அந்தச் செல்வம் தன்னுடைய சொந்த வறுமையைக் காட்டிலும் அறுக்கிறது நெஞ்சை இந்த மாஜி-ராஜாவுக்கு. இப்படிச் சாய்ந்து போனவனுக்கு, 'புதிய ராஜாவும் ஒழிந்து போனான்' என்ற செய்தி கிடைத்தால், இந்த வறுமையிலும் ஏதோ மூச்சை அடைத்த துன்பம் குறைந்து சிறிது ஆறுதல் ஏற்படுவது போலத் தோன்றுகிறதாம். இந்தச் செய்தியுடன் வேறொரு செய்தியும் கிடைக்கிறது. 'நீயே வந்து மறுபடியும் அரசாளலாம்; ஆனால் இனி நீ நிமிர்ந்து கொலுவீற்றிருக்க முடியாது; பழைய சிங்காசனத்திலும் இருக்க முடியாது. கூனிக் குறுகி, "ஒளி மழுங்கிய" நிலையிலே ராஜாவாக இருக்கலாம் பிள்ளாய்!' என்று, ராஜாக்களைத் தன் இஷ்டப்படியே தூக்கி எறியவும், தூக்கி வைக்கவும் வல்ல ராஜ-சூத்திரதாரனிடமிருந்து கட்டளையும் கிடைக்கிறது. இப்போது எப்படி யிருக்கும் இந்த ராஜாவுக்கு?

தபோதனம் செலவாகிறது

இந்த அனுபவம் கிடைக்கிறதாம் சந்திரனுக்கும், ராவண சூத்திரதாரனின் ராட்சஸ அருளினால். 'இந்தச் சூரியன் விஷத்திலும் கொடியவன். இந்தப் பயலைத் துரத்திவிட்டு அந்தப் பிள்ளையைக் கொண்டு வாருங்கள்;

ஆம், அந்தச் சந்திரனைத்தான் கூனிக் குறுகச் செய்து இளம்பிறைப் பிள்ளையாக மேற்கே கொண்டு வந்து நிறுத்துங்கள். விரைவில்—தெரி கிறதா?' என்று கர்ஜிக்கிறான் ராவணன் :

நீலச் சிகரக் கிரிஅன்னவன்,
'நின்ற வெய்யோன்
ஆலத்தினும் வெய்யன்! அகற்றி,
அரற்று கின்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று
விலக்கி, மேலை
மாலைப் பிறைப்பிள்ளையைக் கூவுதிர்
வல்லை!' என்றான்.

[நீலச் சிகரக்கிரி அன்னவன் — சிகரங்களையுடைய நீலமலை போன்ற ராவணன். வெய்யோன் — சூரியன். ஆலத்தினும் — விஷத்தைக் காட்டிலும். வெய்யன்—கொடியவன். அரற்றுகின்ற—கூச்சல் போடுகின்ற. வேலை — சமுத்திரத்தின். தவிர்கென்று — தவிர்க என்று; 'பேசாமல் இரு' என்று தடுத்து விட்டு. மேலை — மேற்குத் திசையில். மாலைப் பிறைப் பிள்ளை — மாலைப்பொழுதில் தோன்றுகிற இளம்பிறைச் சந்திரன். கூவுதிர் — கூவி அழையுங்கள். வல்லை — விரைவில்.]

பகலும் பகலோனும் வரவேண்டுமென்று கட்டளையிட்டதுபோல், மாலைப் பொழுதுடன் பிறைப்பிள்ளை வந்து சேவகம் செய்யட்டும் என்கிறான். 'மாலை' என்ற பெண் ஒக்கலில் சுமக்கும் பிள்ளை போலத் தோன்றுகிறதல்லவா பிறைச்சந்திரன்? 'இவனை அழைத்து வாருங்கள், அவனைத் துரத்தி வாருங்கள்' என்ற பேச்சுக்கிடையே, சமுத்திர கோஷம் (ராவணனுக்கு நாலு புறமும் சமுத்திரமல்லவா?) காதில் விழுகிறது. விழுந்ததுமே 'அந்தக் குரலையும் அடக்கி வாருங்கள், அந்தப் பயலை மௌனமாக்குங்கள்' என்று கூச்சலிடுகிறான். கடல்போல் பெருகி வரும் காம அலைகளுக்கிடையே என்ன பாடுபடுகிறது இந்த 'நீலச் சிகரக் கிரி'— இந்தப் பெரிய தலைகளும் தோள்களும்,—இந்தப் பருத்து ஓங்கிய பர்வத மேனி!

இந்த நிலையிலும் அதிகாரத் திமிருக்குக் குறைவா? சிறிது பொழுதுக்கு முன்புதான் கிழக்கே பூர்ண சந்திரன் — திதி பௌர்ணமி; இப்போது மூன்றாம் பிறைச் சந்திரன் — என்ன அதிசயம்! பழைய சிங்காசனம் கிடந்த திசையிலும் இருக்க முடியவில்லையே, இந்தக் கூனல் — பிறைப்பிள்ளை ராஜாவுக்கு! இப்படி ஆட்டிவைக்கும் சக்தியை ராவணன் பெற்றதற்குத் தவமன்றோ காரணம்? ஒரு குறள் ஞாபகம் வருகிறது கவிஞனுக்கு :

வேண்டிய வேண்டியாங்(கு)
எய்தலால், செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

[வேண்டியாங்கு—வேண்டிய படியே. ஈண்டு — இங்கே; இப்பொழுது.]

தவமே தனமென்று சேர்த்துவைத்த ராவணன் அதைச் செலவு செய்துதான் இவ்வளவு அதிகாரத் திமிரையும் நடத்திக் கொண்டிருக்கிறான். சில 'தேச பக்தர்கள்' தியாகத்தைப் பணமாக்கி அதிகாரமாக்கிச் செலவு செய்வதுபோல, அரக்கர்கோனும் அதிகாரத்தை உபயோகிக்கிறான், —கடைசியாக இழந்துவிடப் போகிறானல்லவா?

தன் வினை தன்னைச் சுடும்

இப்போது அதிகாரம் செல்லுகிறது, — சென்று கொண்டிருக்கிறது. அதனால் தான் மேற்கே மாலைப் பிறைப் பிள்ளையுடன் தோன்றுகிறது, — பயத்துடன்தான். ஆனால் ராவணனும் பயப்படுகிறானா? பாருங்கள்,

.... என்னை
வெகுண்டு மாலை.
அட,வாள் உருவிக்கொடு தோன்றிய-
தாகும் அன்றே!

[வெகுண்டு—கோபித்து. மாலை—மாலைப்பொழுது. அட—கொல்ல. கொடு — கொண்டு.]

என்கிறானே!

மேற்கே திரும்பிப் பார்த்தான் பிறைப் பிள்ளையை. 'மாலைப் பொழுதே! என்னைக் கோபித்து "வெட்டிப் போடுவேன்" என்று உடைவாள் உருவிக் கொண்டு வந்து விட்டாயா?' என்று பழிக்கிறான், பரிதவிக்கிறான். இங்கே 'குணங்கள் தீயோன்' என்று குறிப்பிடுகிறான் ராவணேசுவரனைக் கவிஞன். குணக் கேடர்களின் கதி இது. அணுக்குண்டர்களை இன்று இவர்கள் கண்டு பிடித்திருக்கும் அணுக்குண்டே பயமுறுத்துவது போல் ராவணேசுவரனையும் அந்த அதிகாரத் திமிரே பயமுறுத்தப் பார்க்கிறது. உலகத்தை ஹிம்ஸிக்க அரக்கன் உருவிய வாள் சந்திரமண்டலத்திலும் பிரதிபலித்து அரக்கனையே ஹிம்ஸிக்கிறது.

இவ்வளவு பரிதாப நிலையில் இந்த ஹிம்ஸைக்காரனுக்கும் உலகத்தின் மீது அனுதாபம் பிறக்கிறதாம். அதிசயமான அனுதாபம்:

என்னைச் சுடும்என்னின்,இவ் ஏழுல-
கத்தும் வாழ்வோர்
பின்னைச் சிலர்உய்வர்என்(று) அங்கொரு
பேச்சும் உண்டோ?

[உய்வர் — தப்பிப் பிழைப்பர்.]

ராவணேசுவரனாகிய நம்மையே இந்த இளம்பிறை சுடத் துணிகிறதென்றால், சாமானியர்கள் தப்பிப் பிழைப்பது எப்படி? — தர்க்கவாதம் தான் எப்படி?

காதலித்த காரிருள்

ஞாயிறுபோல் திங்களும், நிறைமதிபோல் குறைமதியும் ஹிம்ஸிக்கக் கண்ட ராவண புத்திக்கு இருட்டே நல்லதென்று தோன்றுகிறது. எப்படிப் பட்ட இருட்டு? நல்ல — சரியான — கன்னங் கறுத்த இருட்டினும் கறுத்த இருட்டு வேண்டுமென்கிறது உள்ளம். இது 'கன்னக்கனியும் இருள்.' 'கன்னக்கனியும் மிருள்' என்று அழுத்திச் சொல்கிறான் அரக்கன்:

கன்னக் கனியும்மிருள் தன்னையும்
காண்டும் அன்றே!

[காண்டும் — காண்போம்.]

என்ன ஆசை பார்த்தீர்களா ராவணனுக்கு இப்போது? பார்க்க வேண்டுமாம் இந்த இருட்டையும். இப்படி ராவணேசுவரன் கூறியதும், இவன் 'காண்டற்கு இனிதாய்' வருகிறதாம் இருள். இவன் பார்க்க விரும்பும் இருட்டு, தொட்டுப் பார்ப்பதற்கும் எளிதாக வந்து விடுகிறது!

ஆண்(டு)அப்பிறை நீங்கலும்,
 எய்திய(து)
 அந்த காரம்

தீண்டற்(கு) எளிதாய்ப்,
 பலதேய்ப்பன
 தேய்க்க லாகி,

வேண்டில் கரபத்திரத்(து)
 ஈர்த்து
 விழுத்த லாகிக்

காண்டற்(கு) இனிதாய்ப்
 பலகந்து
 திரட்ட லாகி!

[ஆண்டு – அப்போது. எய்தியது – வந்து சேர்ந்தது. அந்தகாரம் – இருட்டு. தீண்டற்கு – தொடுவதற்கு. பல தேய்ப்பன – தேய்க்கப்படுவதற்கு உரிய பலபொருள்கள். தேய்க்கலாகி – தேய்ப்பதற்கு ஏற்ற (கல்லுப்போலக்) கடினமானதாய். வேண்டில் – விரும்பினால். கரபத்திரம் – கைரம்பம். ஈர்த்து – அறுத்து. கந்து – தூண்கள்.]

ஒரு மெழுகுவர்த்தி விளக்கை ஊதி அணைப்பதுபோல் அணைத்துவிட்டார்கள் பிறைச்சந்திரனை. உடனே சூழ்ந்து கொள்கிறது 'கன்னக் கனியும் இருளு'க்கும் மேலான காரிருள். இதைத்தான் 'அந்தகாரம்' என்று வாய் நிறைந்த வட சொல்லோசை கொண்டு குறிப்பிடுகிறான் கவிஞன்.

ஆஹா, இந்த அந்தகாரம் ராவணனுள்ளத்தில் நிறைந்திருக்கும் காமாந்தகாரத்தோடு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!



280. இருளூடு வந்த விளக்கு

அந்தகாரத்தைப் பலவிதமாக வருணித்தும் திருப்தியடையாத கவிஞனுள்ளம் கடைசியாக ஓர் உபமானத்தால் திருப்தியடைகிறது. ஒரு கேள்விச் சுடர் (Culture), தீங்கில்லாத பொருள் பொதிந்த கேள்விச் சுடர் புகுந்து வழங்கியதில்லை. இதுதான் குருடு – இரண்டு கண்களும் இல்லாமலிருப்பதன்று! அகக்குருடாகிய இந்த நெஞ்சைக் காட்டிலும் கரியது ஒன்றுமில்லை - இருக்க முடியாது. எனவே கேள்விச்சுடர் வழங்கப் பெறாத இந்த உள்ளம் போலக் கருமையானது ராவணனைச் 'சூழ்ந்து கொண்ட அந்தகாரமும் என்கிறான் கல்வி கேள்விகளிற் பெரியவனான கம்பன்.

இது கருங்கல்லோ, — சந்தனக் கட்டையை உரைத்துப் பார்க்கலாமா? கருங்காலிக் கட்டையா — கை ரம்பம் கொண்டு அறுத்துப் பார்க்கலாமா? பல கருங்காலித் தூண்களாக உருட்டித் திரட்டிக் கடைந்து கொள்ளலாமோ? இப்படியெல்லாம் நினைத்துப் பார்த்த பின், காடு முரடாக 'விறகுகளாக வெட்டித் தள்ளலாமா?' என்றுகூடத் தோன்றுகிறதாம். கடைசியாகத் தான் கவிஞனது நெஞ்சைத் திருப்தி செய்யும் 'நெஞ்சு-உபமானம்' வருகிறது :

முரு(டு)ஈர்ந்(து) உருட்டற்(கு) எளி(து)
என்பதென்? முற்றும் முற்றிப்
பொருள்தீங்கில் கேள்விச் சுடர்புக்கு
வழங்கல் இன்றிக்
குரு(டு)ஈங்(கு)இ(து)!—என்னக் குறிக்கொண்டு
கண்ணோட்டம் குன்றி
அருள் தீர்ந்த நெஞ்சிற் கரிதென்ப(து)
அவ் அந்த காரம்.

[முருடு — முரடு முரடான விறகுக்கட்டை. ஈர்ந்து — (இங்கே) பிளந்து. என்பதென் — என்று சொல்வானேன். மூற்றும் முற்றி — மிகவும் முதிர்ந்து. பொருள் நீங்கில் கேள்விச் சுடர் - பொருள் பொதிந்த, நீங்கில்லாத, கேள்விச் சுடர் என்ற ஞான தீபம். புக்கு வழங்கல் இன்றி- உள்ளே நுழைந்து செல்வதற்கும் இடம் கொடாமல். குருடு ஈங்கு இது என்ன - (இங்கு) இம் மனக்குருடே குருடு என்று எடுத்துக் காட்டுதற்கு. குறிக் கொண்டு - இலக்கான தாய். கண்ணோட்டம் - தயை தாட்சண்யம். நெஞ்சின் - நெஞ்சுபோல.]

இப்படி இருட்டை வருணிக்கும் கம்பனின் மனோபாவத்துடன் ஆங்கில மகா கவியான மில்டன் 'தொட்டுணரக்கூடிய இருட்டு' (palpable darkness) என்று வருணித்திருக்கும் அந்த மனோபாவத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம். புகழேந்திப் புலவர் 'நளவெண்பா'வில் 'கருவிக்கும் நீங்காத காரிருள்' என்றும்,

அள்ளிக் கொளலாய்,
அடையத் திரண்டொன்றாய்,
கொள்ளிக்கும் விள்ளாத
கூரிருள்

என்றும் வருணித்திருப்பது, கம்பன் வருணிக்கும் அந்தகாரத்தின் எதிரொலிதான்.

அம்பும் அனலும் நுழையாக்
கன அந்த காரத்து

என்றும் கம்பன் வருணிக்கிறான்.

இந்த அந்தகாரத்திற்குக் கனமும் உண்டோ? அம்பு போட்டாலும் நுழையாதாம். அனலைக்கொண்டு வெளிச்சம் உண்டாக்கலா மென்று நினைத்தால் அனலும் நுழைய முடியாதபடி அவ்வளவு கனமாக இருக்கிறதாம். இந்த அந்தகாரத்திற்கிடையே தன்னந் தனியாக இருக்கிறான் ராவணன் — உள்ளே காமாந்தகாரம், வெளியே கன அந்தகாரம்.

பெண் விளக்கு

இத்தகைய இரட்டை இருட்டில் ராவணன் கண்முன் ஓர் அதிசயம் நிகழ்கிறது, ஏதோ ஒரு ஜாலவித்தை நடைபெறுவது போல. மேலே, மழைபெய்யக் காலிறங்கிய மேகம். கீழே ஒரு பவழக்கொடி, தனக்குத் தானே ஒப்பானது. அந்தக் கொடி தன்மீது அந்தக் கருமேகத்தைத் தாங்குகிறது; சந்திரனையும் தரித்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தோற்றம் ஓர் இனிய தீபம்போலத் தோன்றுகிறதாம் ராவணன் முன்:

வெம்பும் தமியேன்முன் விளக்கெனத்
தோன்று மன்றே!

[தமியேன்முன் — துணையற்ற எனக்கு எதிரே.]

ராவணனது நெஞ்சிலே ஒழுக்கத்தை உயிர்நிலையாகக் கொண்ட 'கேள்விச்சுடர்' வழங்கவில்லை. எனினும், இவனுக்கு அதிகமான வித்தையுண்டு. புத்தியோ?—ஒரு மூளையா, பத்து மூளையின் சக்தியும் இருக்கிறதல்லவா? வேத சாஸ்திரங்களை விழுங்கி ஏப்பமிட்டிருக்கிறான்—ராவண சாஸ்திரி, ராவண தீட்சிதர்களை தர்க்காலங்கார சூடாமணி என்றெல்லாம் எத்தனையோ பட்டங்களை வழங்கிவிடலாம். மனப்பான்மையும் விஞ்ஞான



சித்ரலேகா

மனப்பான்மை தான். தான் கண்ட தோற்றத்திற்குத் தற்கால விஞ்ஞான சாஸ்திரிபோல் தக்க காரணம் ஒன்று கண்டு பிடிக்க இவன் முயல்வதைப் பாருங்கள்.

மருளூடு வந்த மயக்கோ!
[மருள்-(இங்கே) மோகம்.]

என்று தான் முதல் முதல் நினைக்கிறான். காமமோகத்தால் தோன்றும் கானல் தோற்றம் தானோ?—இது முதல் நினைப்பாகத் தோன்றவேண்டுமென்றால் ராவணனைத் தர்க்கவாதியென்றும் விஞ்ஞான வாதியென்றும் சொல்லக் கூடுமல்லவா?

பிறகு, இது பொய்க் காட்சியாக இராது என்று தீர்மானிக்கிறான். 'என் ஆணைக்கு அடங்காத வேறொரு சந்திரனும் உண்டோ?' என்று ஒரு கணம் நினைக்கிறான். மறுகணம் 'எந்தச் சந்திரனுக்கு இந்த நிலாச்சுடர் உண்டு, இந்தப் பொலிவு உண்டு' என்று அதிசயிக்கிறான்.

தன்முன் உதயமான சந்திரன் — என்ன விநோதம்! — இரண்டு குண்டலங்கள் அணிந்து தோன்றுகிறது:

இருளு(டு) இருகுண்டலம் கொண்டும்,
இருண்ட நிலச்
சுருளோடும் வந்(து)ஓர் சுடர்மாமதி
தோன்று மன்றே!

[மாமதி — பூர்ண சந்திரன்.]

மேகமும் சந்திரனும் தாங்கிய பவழக் கொடி, அந்தகாரத்திலே எப்படியோ ஓர் அதிசய விளக்காகி இவன் கண்முன் நின்றதல்லவா? அந்த அற்புத விளக்கிலே அற்புதமாக அமைந்து சுடரும் சந்திர பிம்பம் இப்போது இவனுள்ளத்தைக் கவர்ந்ததும், அந்தக் கருமேகம் நுனி சுருண்ட கூந்தலாகிறது. சந்திரன் முக சந்திரனாகிறது. பவழக்கொடி மெள்ள மெள்ளப் பெண் கொடியாகிறது.

விடம்நுங்கிய கண்ணுடை யார்இவர்,
மெல்ல மெல்ல
மடமங்கைய ராய்என் மனத்தவர்
ஆயி னாரே!

[விடம்—விஷம். நுங்கிய—விழுங்கிய. மடமங்கை—இளம் பெண்.]

என்று தேறுகிறான்.

விஷம் விழுங்கிய கண்

இம் 'மடமங்கை'யை எவ்வளவு பயபக்தியோடு, எவ்வளவு மரியாதையாக உயர்வுப் பன்மையால் பேசுகிறான்! இந்த இரகசியத்தை இம்மங்கையின் இரண்டு கண்களிலும் காணலாம். விஷம் விழுங்கிய கரிய கண்கள் கொல்லாமல் கொல்லுகின்றன. இந்தக் கொலைக் கண்களுக்கு ராவணேசுவரனும் குழைந்து 'சலாம்' செய்கிறான். இந்தக் கொலைக் கண்ணியை இஷ்ட தெய்வமாக ஏற்றுக் கொள்கிறான். 'என் மனத்தவர் ஆயினாரே' என்ற ஏக்கத்திலே, 'இக்கொலைக் கண்களிலிருந்து எவ்வாறு தப்பமுடியும்? தப்பிவிடவும் விரும்பவில்லையே!' என்ற மன நிலை பிரதிபலிக்கிறதல்லவா?

எத்தனையோ கண்களை இதற்கு முன் பார்த்திருக்கிறான்! வேல் போன்ற கண்கள், வாள் போன்ற கண்கள், அம்பு போலக் குறி தவறாது பாயும் பார்வை — இப்படி யெல்லாம் பார்த்திருந்தும், இப்படிப்பட்ட விஷம் நுங்கிய (அதாவது விஷத்தைப் பேராசையோடு விழுங்கிய) கண்களைப் பார்த்ததில்லையே:

பண்டே உல(கு)ஏழினும் உள்ள
படைக்க ணாரைக்
கண்டேன்; இவர்போல்வதோர் பெண்ணுருக்
கண்டி லேனால்;
உண்டே எனின்வே(று)இனி, எங்கை
உணர்த்தி நின்ற
வண்டேறு கோதை மடவார்இவர்
ஆகு மன்றே!

[பண்டே — முன்னமே; நெடுங்காலமாக. படைக்கணார் — கொலைக் கருவிகள் போலக் கூரிய கண்களையுடையவர்கள். எங்கை — என் தங்கை. உணர்த்தி நின்ற — தெரிவித்த. வண்டு ஏறு கோதை - வண்டுகள் மொய்க்கும் கூந்தல். மடவார் — இளமங்கையர்.]

'என் தங்கை தெரிவித்த பெண்மணியே இவர்' என்று முடிவு கட்டியதும், 'இவள்தானே இங்கு வருவதற்குக் காரணமென்ன?' என்பதையும் ஆலோசித்துப் பார்க்கிறது ராவணனுள்ளம்.